# அன்பரின் ஊழியம்

## ANBARIN OOZHIYAM

மலர்:9 இதழ்:8 ஆகஸ்டு 2023 தனிபிரதி- ரூ.20/- ஆண்டு சந்தா- ரூ.200/-

VOL: 9 ISSUE NO : 8 **August 2023** Single Copy - Rs 20/- ANNUAL SUBSCRIPTION: RS 200/-


# தரித்து நில்

## *Be Still*



# வெறும் கையோடு நிற்கதியாக நின்ற எனக்கு சர்வ வல்லமையுள்ள தேவன் ஜெபத்தை கேட்டு நீதி செய்து இழந்த அனைத்தையும் திரும்ப தந்தார்!



என் பெயர் வாசவி. ஒரு பிரச்சனையின் நிமித்தம் நானும் என் கணவரும் திடீரென பிரிய வேண்டிய சூழ்நிலைக்கு உள்ளானோம். அந்த நேரத்தில் என் கணவர் என்னுடைய நகைகள், பணம், மூதாதையரின் நிலம் விற்றதில் வந்த என்னுடைய பங்கு, கார் என அனைத்தையும் அவர் எடுத்துக் கொண்டு போய்விட்டார். இதனால் என் கையில் ஒன்றுமே இல்லாத ஒரு நிலைக்கு உள்ளானேன். மேற்கொண்டு என்ன செய்வது என தெரியாமல் நான் திகைத்து நின்றேன்.

இந்நிலையில் ஐதராபாத்தில் நடந்த குடும்ப ஆசீர்வாதக்கூட்டத்தில் கலந்துக்கொண்டேன். **Dr. ஆனந்த ஸ்திரா** அவர்கள் அளித்த தேவ செய்தி என் கண்ணீரை துடைத்து ஆறுதல்படுத்தியது. அவர்களிடத்தில் உண்மையான இயேசுவின் மனதுருக்கத்தையும், ஒரு தகப்பனின் பாசத்தையும் கண்டேன். கூட்டம் முடிந்ததும் சகோதரர் அவர்கள் மக்களின் கவலைகளை எல்லாம் பொறுமையோடு கேட்டு அவர்களுக்கு ஏற்ற ஆலோசனைகளை சொல்லி ஜெபிப்பதை பார்த்தேன். நானும் சகோதரரிடம் ஜெபிக்க சென்றபொழுது **"மகளே" என அழைத்து, ஒன்றுக்கும் கலங்காதே! கர்த்தர் எல்லாவற்றையும் உனக்கு திரும்பத்தருவார், உனக்கு வரவேண்டிய பங்கு கிடைக்கும் என்று தீர்க்கதரிசனமாய்"** கூறினார்கள். அதை என்னால் நம்பவே முடியவில்லை. எனக்காக கண்ணீரோடு ஜெபம் செய்து அனுப்பினார்கள்.

சகோதரர் ஜெபித்தபடியே கர்த்தர் அற்புதமாக ஒரு சில நாளில் எனக்கு வரவேண்டிய பங்கு கிடைக்கும்படி செய்தார். நிற்கதியாக நின்ற என்னை நிறைவாக்கினார். மாராவாக (கசப்பாக) இருந்த என்னை நகோமியாக மாற்றினார். தேவனுக்கே மகிமை! என் பொருத்தனை காணிக்கையை அன்பரின் ஊழியத்திற்கு தருகிறேன்.

**- திருமதி. வாசவி, ஐதராபாத்**



# அன்பரின் ஊழியம்

மலர்:9 ◆ ஆகஸ்ட் 2023 ◆ இதழ் 8

## உங்கள் ஆசிரியரிடமிருந்து...

அதி சீக்கிரமாய் வரப்போகிற நம் இராஜாதி இராஜாவாகிய இயேசு கிறிஸ்துவின் விசுவாசிகளுக்கும், அருமையான பங்காளர்கள் அனைவருக்கும் இயேசுவின் நாமத்தில் என்னுடைய வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

✦ **பிரியமானவனே, உன் ஆத்துமா வாழ்கிறது போல நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்கும்படி வேண்டுகிறேன்**
**- 3 யோவான் 1:2**

✦ **கர்த்தர் நல்லவர், இக்கட்டு நாளிலே அரணான கோட்டை தம்மை நம்புகிறவர்களை அறிந்திருக்கிறார். - நாகூம் 1 : 7**

கர்த்தர் எங்களுக்குக் கொடுத்த மிகப் பெரிய ஊழியமாகிய அன்பரின் ஊழியத்தையும், **SJ Saves Trust** அறப்பணிகளையும், மருத்துவமனையின் பணிகளையும் நேசித்து, ஜெபத்தாலும், பல்வேறு உதவிகளாலும் தாங்கி வருகின்ற உங்கள் அனைவருக்கும் எங்கள் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். **நன்மை செய்கிறதில் சோர்ந்துபோகாமல் இருப்போமாக! நாம் தளர்ந்து போகாதிருந்தால் ஏற்றகாலத்தில் அறுப்போம் (கலாத்தியர் 6:9)**

நாம் அனைவரும் அறிந்தபடி கிறிஸ்து இயேசுவின் இரண்டாம் வருகைக்குமுன் வேதாகமத்தில் எழுதப்பட்ட அத்தனை தீர்க்க தரிசனங்களும் நிறைவேறி முடியப்போகின்ற காலத்தை நாம் அனைவரும் அறிவோம். 2004-ஆம் ஆண்டு சுனாமி வருவதற்கு முந்தைய நாள் டிசம்பர் 25-ம் தேதி அன்று கர்த்தர் இயேசு என் தந்தைக்கு ஏழு பிரதான தூதர்களையும், மிகப்பெரிய வெளிப்பாட்டையும் அவருக்கு காண்பித்தார். அவைகள் அனைத்தும் நிறைவேறி வருவதைப் பார்க்கிறோம்.

ஒவ்வொரு நாளும் நாம் பாதுகாப்பாய் இருப்பது தேவ கிருபையே. உலகமெங்கும் அநீதியும், தேவனுக்கு விரோதமான பாவங்களும் அவரைப் பற்றி சொல்லப்படுகிற தூஷணங்களும் மாறுபாடான உபதேசங்களும், பிசாசின் கிரியைகளும் பெருகிக்கொண்டே போகிறது. பிசாசு தனக்கு கொஞ்ச காலம் இருக்கிறது என்று தெரிந்து கொள்ளப்பட்டவர்களில் அநேகரை வஞ்சித்து தன் வசமாய் இழுப்பதையும் அறிவோம். ஆவிக்குரிய ஜீவியத்தில் நன்கு வளர்க்கப்பட்ட பிள்ளைகள்கூட திடிரென்று அவர்கள் கர்த்தரை விட்டு தூரமாய் போகிறார்கள். இதன் நிமித்தம் அநேக பெற்றோர்கள் மிகுந்த கண்ணீரை அனுபவித்து கொண்டு வருகிறார்கள். கொள்ளை நோய்களும், பஞ்சங்களும்,

ஆசிரியர் / வெளியிடுபவர்: Dr. ஜேன் ஜாஷ்வா

சந்தா விபரம்

| | | | |
|---|---|---|---|
| இந்தியா | : | ஆண்டு சந்தா ரூ.200/-. | ஆயுள் சந்தா ரூ.2,000/-. |
| வெளிநாடு | : | ஆண்டு சந்தா ரூ.1,500/-. | ஆயுள் சந்தா ரூ.15,000/-. |

24 மணி நேர ஜெப உதவிக்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்: 94888 45627
காலை 9.30 மணி முதல் இரவு 7.00 மணிவரை ஜெப உதவிக்கு தொடர்பு கொள்ள வேண்டிய எண்: 80987 42638
Telugu & Hindi : 99445 36343, Malayalam : 94889 32937, Kannada : 90031 17205
e-mail: info@mojindia.org website: www.ministryofjesus.in
முகவரி:- அன்பரின் ஊழியம், 40, S.P.K. தெரு, உறையூர், திருச்சி - 620 003. Address:- Ministry of Jesus, 40, S.P.K. Street, Woraiyur, Trichy - 620 003.

நாடுகளிடையே யுத்தங்களும், பூமியதிர்ச்சிகள் அனைத்தும் கர்த்தர் சொன்னபடி அதிகரித்துக் கொண்டே போகிறது.

**இப்படிப்பட்ட சூழ்நிலையில் கர்த்தராகிய இயேசுவின் வருகைக்கு நாம் ஆயத்தம் உள்ளவர்களாய் காணப்பட வேண்டும். எப்போதும் தேவனோடு பேசிக் கொண்டே இருக்கவேண்டும், ஜெபத்திலும், உபவாசத்திலும், துதி ஸ்தோத்திரங் களிலும் தரித்திருந்து தேவ சமூகத்தில் எப்போதும் விழித்திருக்க வேண்டும். நம்மால் இயன்ற உதவியை செய்யவேண்டும்.** பாடுபடுகிற அனைத்து கிறிஸ்தவர்களுக்கும், பூமியிலுள்ள பரிசுத்தவான் களுக்கும், நமது சக தேவபிள்ளைகளுக்கும், ஏழை மக்களுக்கும், பாடுபடுகிற தேவ ஜனங்களுக்கும் உதவுவதிலும், நன்மை செய்வதிலும் சோர்ந்து போகக்கூடாது. **(ரோமர் 2:10; 12:13) எபேசியர் 5:19-21-ன்படி" சங்கீதங்களினாலும் கீர்த்தனை களினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக் கொருவர் புத்தி சொல்லிக்கொண்டு, உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடிக்கீர்த்தனம் பண்ணி, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே எப்பொழுதும் எல்லாவற்றிற் காகவும் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரித்து, தெய்வபயத்தோடே ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந் திருங்கள். அன்பில் நிலைத்திருங்கள்.**

உங்களுக்கு இருக்கிற சரீர பெலவீனங்கள், வியாதிகள், கடன்கள், குடும்ப பிரச்சனைகள், வேலை ஸ்தலத்தில் இருக்கிற போராட்டங்களை கர்த்தர் தாமே நீக்கி விடுதலையை தந்து உயர்த்துவாராக! **(சங்கீதம் 54:6,7; 138:8)**

கடந்த ஜூலை மாதத்தில் நடைபெற்ற அனைத்து கூட்டங்களையும் கர்த்தர் ஆசீர்வதித்தார். **இந்த மாதம் செகந்திராபாத், நாகர்கோவில், சென்னை, உடுமலைப்பேட்டை மற்றும் திருச்சியில் நடைபெறும் எல்லா கூட்டங்களுக்காகவும் ஜெபியுங்கள்.** தொடர்ந்து அநேக இடங்களில் கூட்டங்களை நடத்த ஆவியில் எளிமை உள்ளவர்கள் எங்களை அழைத்த வண்ணம் இருக்கிறார்கள். கூட்டங்களை நடத்த இடைவிடாத ஜெபமும், உதவிகளும் தேவை. நீங்களும் அதில் பங்குபெற்று அநேக ஆத்துமாக்களை ஆதாயம் செய்யுங்கள். **(தானி.12:3)**

- தொடர்ந்து அன்பரின் ஊழியத்திற்காக, **S J Saves Trust** பணிகளுக்காக, **S.J.S.T.** மருத்துவமனை பணிகளுக்காக ஜெபியுங்கள்.
- 1 நாளா.12:22-ன்படி கர்த்தர் தாமே ஊழியத்தில் வாஞ்சையுள்ள அவரால் தெரிந்து கொள்ளப்பட்ட, திறமை உள்ள மக்களை அனுப்பும்படி ஜெபியுங்கள்.
- நம் அனைவரின் ஜெபத்தையும் கர்த்தர் நிச்சயமாய் கேட்டு பெரிய அற்புதங்களை செய்வார். சங்கீதம் 116:12-14-ன்படி இரட்சிப்பின் பாத்திரத்தை எடுத்துக்கொண்டு கர்த்தருடைய நாமத்தை தொழுது இக்கட்டில் நீங்கள் அவருக்கு செய்த பொருத்தனைகளை நமது கூட்டங்களுக்கு வந்து சாட்சி சொல்லி செலுத்துங்கள். கர்த்தர் அதை சுகந்த வாசனையாக அங்கீகரிப்பார்.
- ஜூன் மாதத்திலிருந்து அன்பரின் ஊழிய ஜெபஸ்தல கட்டிடத்தின் பழுது பார்த்தல் மற்றும் புதுப்பிக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. இந்த பணிக்கு பல இலட்சங்கள் தேவைப்படுகிறது. இதற்காக ஜெபியுங்கள். கர்த்தர் உங்கள் உள்ளத்தில் ஏவுகிறபடி காணிக்கை அனுப்பி இந்த பணிக்கு உதவி செய்யுங்கள்.
- பத்திரிக்கையின் 18-ம் பக்கத்தில் அன்பரின் ஊழிய வேலைவாய்ப்பு தகவல்களை நீங்கள் பார்த்து ஊழியத்தில் வாஞ்சையுள்ள பிள்ளைகளை ஊழியத்திற்கு அனுப்பிவையுங்கள்.
- **Ministry of Jesus** என்கிற **you tube** சேனல் வாயிலாக தினந்தோறும் அதிகாலை 5.00 மணிக்கு வருகிற அனுதின அற்புதம் நிகழ்ச்சியை பாருங்கள். அந்த நிகழ்ச்சிகள் உங்களுக்கு ஆசீர்வாதமாக இருக்கும். உங்கள் நண்பர்களுக்கும் share செய்யுங்கள்.
- எங்கள் அப்பா, அம்மா இருவருடைய நல்ல சுகம், பெலன், ஆரோக்கியத்திற்காகவும், எங்களுடைய நல்ல சுகத்திற்காகவும் தொடர்ந்து ஜெபியுங்கள்.
- நம் நாட்டிற்காகவும் ஊக்கமாய் ஜெபியுங்கள்.

**இம்மாத வாக்குத்தத்த வசனங்கள்**

**சங்கீதம் 3:8; மல்கியா 3:10**
**எண்ணாகமம் 6:25**
**மத்தேயு 7:11**

கிறிஸ்துவின் பணியில்
**Dr. ஜேன் ஜாஷ்வா**



# தரித்து நில்!

தேவ செய்தி

**Dr. ஜேன் ஜாஷ்வா**

எனக்கு மிகவும் பிரியமான அன்பரின் ஊழிய வாசகர்களே! அன்பு பங்காளர்களே! நம் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் உங்களுக்கு எனது வாழ்த்துக்கள்.

இந்த மாதம் தேவன் உங்களுக்கு சொல்கிறது தரித்து நில்! தரித்து நிற்க வேண்டும் என்ற அர்த்தம் கொண்ட வசனங்களை நாம் கீழே பார்க்கலாம்.

- நீங்கள் அமர்ந்திருந்து, நானே தேவனென்று அறிந்து கொள்ளுங்கள்! ஜாதிகளுக்குள்ளே உயர்ந்திருப்பேன், பூமியிலே உயர்ந்திருப்பேன் - சங்கீதம் 46 : 10
- அப்பொழுது மோசே ஜனங்களை நோக்கி: பயப்படாதிருங்கள்! நீங்கள் நின்று கொண்டு இன்றைக்குக் கர்த்தர் உங்களுக்குச் செய்யும் இரட்சிப்பைப் பாருங்கள்! இன்றைக்கு நீங்கள் காண்கிற எகிப்தியரை இனி என்றைக்கும் காணமாட்டீர்கள். கர்த்தர் உங்களுக்காக யுத்தம்பண்ணுவார்! நீங்கள் சும்மாயிருப்பீர்கள் என்றான் - யாத். 14: 13, 14
- இப்பொழுது கர்த்தர் உங்கள் கண்களுக்கு முன்பாகச் செய்யும் பெரிய காரியத்தை நின்று பாருங்கள் - 1 சாமுவேல் 12: 16
- இந்த யுத்தத்தைப் பண்ணுகிறவர்கள் நீங்கள் அல்ல! யூதா மனுஷரே, எருசலேம் ஜனங்களே, நீங்கள் தரித்துநின்று கர்த்தர் உங்களுக்குச் செய்யும் இரட்சிப்பைப் பாருங்கள்! பயப்படாமலும் கலங்காமலும் இருங்கள்! நாளைக்கு அவர்களுக்கு எதிராகப் புறப்படுங்கள்! கர்த்தர் உங்களோடே இருக்கிறார் என்றான் - 2 நாளா. 20 : 17

மேற்கண்ட இந்த நான்கு வசனங்களில் **"நீங்கள் அமர்ந்திருந்து, நீங்கள் நின்றுகொண்டு, நீங்கள் சும்மாயிருந்து, தரித்து நின்று"** என்ற வார்த்தைகள் நமக்கு ஆச்சரியத்தை தருகிறது. ஆங்கில மொழியில் Be Still and see the Salvation of the Lord அதாவது கர்த்தருக்குள் நீங்கள் நின்று கொண்டு, கர்த்தர் செய்யும் இரட்சிப்பை பாருங்கள் என்ற பொருளில் உள்ளது. இதற்குரிய அர்த்தம், நாம் சாதாரணமாக காத்திருக்கிறோம் என்று சொல்வோம், அந்த காத்திருக்கிறதை இன்னும் கொஞ்சம் ஆழமாக சொல்வது தான் Be Still.

எந்த ஒரு மனுஷனுக்கும் காத்திருப்பது என்பது ஒரு கடினமான காரியம்தான். ஆனால் உலகப்பிரகாரமான காரியங்களுக்காக எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் காத்திருக்க மக்கள் தயாராயிருக்கிறார்கள். ஒரு i phone மாடல் புதிதாக வருமென்றால் அதை அன்றே வாங்குவதற்காக பல நாடுகளில் APPLE STORE-களுக்கு வெளியே பல கிலோமீட்டர் தூரத்திற்கு வரிசையில் நின்று வாங்குகிறார்கள். அதே போல இங்கிலாந்து நாட்டில் விம்பிள்டன் என்னும் இடத்தில் நடக்கும் டென்னிஸ் போட்டிகளை காண வரிசையில் நிற்பதற்கு ஒரு கார்டு வாங்க வேண்டும். வியாழக்கிழமை போட்டி என்றால் செவ்வாய் கிழமையிலிருந்தே வரிசையில் நிற்பார்கள். இதற்கும் மக்கள் ஆயத்தமாக உள்ளார்கள். தன்னுடைய வாழ்நாளில் இவ்வாறு காத்திருப்பது மனிதனுக்கு கஷ்டம் என்று நினைத்தால் கூட இப்படி உலகப் பிரகாரமான சிற்றின்பங்களுக்காக ஆர்வமாகவே காத்திருக்கிருக்கின்றனர். இதை ஒரு பெரிய சந்தோஷமாக நினைக்கின்றனர். ஆனால் ஆன்மீக காரியங்களுக்காக அல்லது முடிவு தெரியாத ஒரு காரியங்களுக்காக அமைதியாக காத்திருப்பது, சமாதானத்தோடு சலனமில்லாமல் இருப்பது மிகவும் கடினமே!

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நமக்கோ ஆண்டவர் கூறுவது, **"நீங்கள் தரித்து நின்று நானே தேவன் என அறிந்துகொள்ளுங்கள்! நான் உங்களை இரட்சிப்பேன், ஆசீர்வதிப்பேன் எனக்காக காத்திருங்கள்"** என்கிறார். **Be Still** என்றால் **Do nothing** என அர்த்தம். **அதாவது**

**எதுவுமே செய்யாதே நான் சொல்கிற வரைக்கும் அப்படியே நில்லுங்கள், எல்லாவற்றையும் நான் பார்த்துக்கொள்கிறேன் என்கின்றார். தேவனே, உமக்குக் காத்திருக்கிறவர்களுக்கு நீர் செய்பவைகளை, நீரேயல்லாமல் உலகத்தோற்றம் முதற்கொண்டு ஒருவரும் கேட்டதுமில்லை, செவியால் உணர்ந்ததுமில்லை, அவைகளைக் கண்டதுமில்லை ஏசாயா 64:4** இப்படி தரித்து நிற்கிற நேரத்தில் கர்த்தர் செய்கிற காரியத்தை கண்ணால் பார்க்கவும் முடியாது, காதால் கேட்கவும் முடியாது என்பது ஒரு கஷ்டமான நிலை. கர்த்தாவே என்ன செய்து கொண்டிருக்கிறீர் என்ற கேள்வி நமக்கு வரும். பிரியமானவர்களே! பரிசுத்த ஆவியானவர் இந்த வசனங்களை எனக்கு கொடுத்தபொழுது ஆவியானவர் சொன்ன காரியம் எனக்கு மிகவும் புதியதாக இருந்தது. கர்த்தர் அந்த வார்த்தைகளை பயன்படுத்தின விதம் மிகப்புதுமையாக இருந்தது. இது மனிதர்களுடைய நினைவுகளுக்கு அப்பாற்பட்டது.

## 1. தரித்து நில்! உன் வாழ்க்கையை அவர் புதிதாக கட்டமைக்கிறார்! (BE STILL! HE IS RESTRUCTURING YOUR LIFE)

**நாம் தேவ சமூகத்தில் தரித்து நிற்கும் பொழுது முதலாவது, அவர் உங்கள் வாழ்க்கையை புதிதாக கட்டமைக்கிறார். தேவை இல்லாதவற்றை எடுத்து விட்டு புதிதாக சீரமைக்கிறேன் என்று வாக்குப்பண்ணுகிறார்.**

**முந்தினவைகளை நினைக்கவேண்டாம். பூர்வமானவைகளைச் சிந்திக்கவேண்டாம். இதோ, நான் புதிய காரியத்தைச் செய்கிறேன். இப்பொழுதே அது தோன்றும். நீங்கள் அதை அறியீர்களா? நான் வனாந்தரத்திலே வழியையும், அவாந்தர வெளியிலே ஆறுகளையும் உண்டாக்குவேன் - ஏசாயா 43: 18, 19** மேற்கண்ட வசனத்தில் முந்தினவைகளை யோசிக்காதே நான் புதிய காரியத்தை செய்கிறேன் என கர்த்தர் கூறுகின்றார். அந்த காலத்தில் இந்தியாவில் வாழ்ந்த பல சிற்றரசர்களின் அரண்மனைகள் எல்லாம் மிகவும் பிரம்மாண்டமாக இருக்கும். ஏக்கர் கணக்கில் தோட்டங்கள், பல நீரூற்றுகள், ஏராளமான குதிரைகள், வேலைக்காரர்கள் என செல்வ செழிப்போடு இருந்தார்கள். காலங்கள் மாற மாற அந்த ராஜாக்களுக்கு எந்த வருமானமும் இல்லை. அநேக சிறிய ராஜாக்கள் ஆங்கிலேயர் காலம் முடிந்த பொழுது அவர்களுடைய அரண்மனையை எல்லாம் பெரிய ஹோட்டல்களாக, **Resort** ஆக மாற்றி விட்டார்கள். அந்த காலத்தில் அவர்கள் சந்தோஷத்திற்கு, களிப்பிற்கு இருந்த நீரூற்றுகள் இப்பொழுது நீச்சல் குளமாக மாறிவிட்டது. நடனமாடி இசை வாசித்த கொண்டாடின இடங்கள் பெரிய பெரிய **Banquet Halls** ஆக மாறிவிட்டது. அரண்மனைகள் ஹோட்டல்களாக மாறிவிட்டது. அதேப்போல கர்த்தர் தம்முடைய திட்டத்தை நம் வாழ்க்கையில் நிறைவேற்றுவார் என்றால் நம் வாழ்க்கை முழுவதுமாக மாறுகிறது. அவர் நம்மை எப்படியெல்லாம் மாற்றுகிறார் என்பது நமக்கு தெரியாது. ஏனென்றால் **(He is the master Builder, Architect)** அவரே தலைமை கட்டுநர், கட்டிட வடிவமைப்பாளர். அவருக்கு மட்டும் தான் தெரியும். அவற்றையே இங்கே புதிய காரியம் என சொல்கிறோம். **வனாந்தரத்தில் வழிகளையும், நீரூற்றுகளையும் உண்டு பண்ணுகிறேன் என்று கூறுகிறார். இது நீங்கள் தேவ சமூகத்தில் தரித்து நிற்கும்பொழுது நடக்கும் என்று கர்த்தர் கூறுகிறார். அதற்கு உதாரணமாக, ஆபிரகாமிலிருந்து யாக்கோபு வரைக்கும் அவர்கள் வாழ்க்கையை வாசிப்பீர்கள் என்றால் நன்றாக புரியும்.**

### (i) ஆபிரகாம், ஈசாக், யாக்கோபின் வாழ்க்கையை சீரமைத்த கர்த்தர்!

கர்த்தர் ஆபிரகாமை எப்படி அழைத்தார் என்பதைக் குறித்து ஆதியாகமத்தில் எழுதப் பட்டிருக்கிறது. யோசுவா 24:2ல் ஆபிரகாமின் தந்தை தேராகு வேறே தேவர்களை சேவிக்கிற ஆசாரியராக இருந்தார் எனவும் எழுதப்பட்டுள்ளது. அப்படிப் பட்ட ஒருவனுடைய குமாரனான ஆபிரகாமையே கர்த்தர் அழைத்தார். **அவனை பெரிய தேசமாக்குகின்றார்.**

ஆதியாகமம் 15ம் அதிகாரத்தில் ஆபிரகாம் ஒரு குழந்தைக்காக ஜெபம் செய்தான். **அப்பொழுது அவர் ஆபிராமை நோக்கி: உன் சந்ததியார் தங்களுடையதல்லாத அந்நிய தேசத்திலே பரதேசிகளாயிருந்து, அத்தேசத்தாரைச் சேவிப்பார்கள் என்றும், அவர்களால் நானூறு வருஷம் உபத்திரவப் படுவார்கள் என்றும், நீ நிச்சயமாய் அறியக்கடவாய். இவர்கள் சேவிக்கும் ஜாதிகளை நான் நியாயந் தீர்ப்பேன். பின்பு மிகுந்த பொருள்களுடனே**

**புறப்பட்டு வருவார்கள். நீ சமாதானத்தோடே உன் பிதாக்களிடத்தில் சேருவாய், நல்ல முதிர்வயதிலே அடக்கம்பண்ணப்படுவாய். நாலாம் தலைமுறையிலே அவர்கள் இவ்விடத்துக்குத் திரும்ப வருவார்கள். ஏனென்றால் எமோரியருடைய அக்கிரமம் இன்னும் நிறைவாகவில்லை - ஆதி. 15: 13 -16** என வாக்குப்பண்ணினார்.

ஆபிரகாமுக்கு பிறந்த சேஷ்டபுத்திர குமாரன் ஈசாக்கு ஒருவன் தான். ஈசாக்கு ஒருவனால் அந்த தேசத்தை அரசாட்சி செய்ய முடியுமா? கர்த்தர் நினைத்தால் நிச்சயமாக முடியும். ஆனால் கர்த்தருடைய திட்டமே வேறு. நைல் நதி முதல் ஐபிராத்து நதி வரைக்கும் பெரிய இடமாக அந்த தேசம் இருந்தது. ஈசாக்கிற்கு பிறகு அடுத்த சந்ததி வந்தது, ஏசா, யாக்கோபு பிறந்தார்கள். அங்கே யாக்கோபை மட்டும் கர்த்தர் தேர்ந்தெடுக்கின்றார்.

யாக்கோபின் வாழ்க்கையிலும் ஒரு நேரத்தில் எல்லாவற்றையும் விட்டுவிட்டு ஓட வேண்டிய நிலைமை ஏற்பட்டது. அதன்பின் கீழ்திசையாரின் தேசத்தில் தன் மாமன் வீட்டில் தங்கியிருந்தப் பொழுது, அவனுக்கு திருமணமாகி 12 குமாரர்கள் பிறந்தார்கள். மீண்டும் கர்த்தர் அவன் வாழ்ந்த கானான் தேசத்திற்கு அவனை கொண்டு வந்தார். அங்கு வாசம் பண்ணின நாட்களில் அவனுடைய குமாரர்கள் யோசேப்பை தன் தந்தைக்கு தெரியாமல் அடிமையாக விற்கின்றனர்.

யோசேப்பு எகிப்தில் அடிமையாக இருக்கிறான். கர்த்தர் யோசேப்பிற்காக சில ஆயத்தங்களை செய்கின்றார். இது யாக்கோபுக்கும், ஈசாக்குக்கும் தெரியாது. ஏன் ஆபிரகாமுக்கும் கூட தெரியாது. **ஆதி. 28:15ம்** வசனத்தில் யாக்கோபுக்கு கர்த்தர் ஒரு வாக்குத்தத்தம் செய்கிறார். **நான் உன்னோடே இருந்து, நீ போகிற இடத்திலெல்லாம் உன்னைக் காத்து, இந்தத் தேசத்துக்கு உன்னைத் திரும்பி வரப்பண்ணுவேன், நான் உனக்குச் சொன்னதைச் செய்யுமளவும் உன்னைக் கைவிடுவதில்லை என்றார்.**

எகிப்திற்கு செல்வோம் என்று யாக்கோபு ஒருபோதும் நினைத்திருக்க மாட்டான். ஆனால் ஆதியாகமம் 46ஆம் அதிகாரத்தில் வாசிக்கும் பொழுது, **அன்று இரவிலே தேவன் இஸ்ரவேலுக்குத் தரிசனமாகி: யாக்கோபே, யாக்கோபே என்று கூப்பிட்டார். அவன் இதோ, அடியேன் என்றான். அப்பொழுது அவர்: நான் தேவன், நான் உன் தகப்பனுடைய தேவன், நீ எகிப்து தேசத்துக்குப் போகப் பயப்படவேண்டாம். அங்கே உன்னைப் பெரிய ஜாதியாக்குவேன். நான் உன்னுடனே எகிப்துக்கு வருவேன், நான் உன்னைத் திரும்பவும் வரப்பண்ணுவேன். யோசேப்பு தன் கையால் உன் கண்களை மூடுவான் என்று சொன்னார் - ஆதி. 46: 2-4** அங்கே உன்னை பெருகப் பண்ணுவேன் என வாக்களிக்கின்றார். **யோசேப்புக்கு எகிப்திலே பிறந்த குமாரர் இரண்டுபேர், ஆக எகிப்துக்குப்போன யாக்கோபின் குடும்பத்தார் எழுபதுபேர் - ஆதி. 46 : 27 எகிப்துக்கு செல்லும் பொழுது 70 பேராக சென்றார்கள். ஆனால் திரும்பி வரும் பொழுதோ ஒரு பெரும் ஜனக்கூட்டமாய் திரும்பி வந்தார்கள். இது தான் கர்த்தருடைய மகத்தான திட்டம். இந்த திட்டத்தை முன்னோர்கள் அறிந்திருக்கவில்லை. ஆனாலும் கர்த்தர் சொன்ன வார்த்தையை விசுவாசித்தார்கள்.**

## (ii) ஒரு ஜனக்கூட்டத்தை சீரமைத்த கர்த்தர்!

இதே போன்ற ஒரு சீரமைப்பை இஸ்ரவேல் ஜனங்களுக்கும் தேவன் செய்தார். இதை **யாத்திராகமம் 14-ம்** அதிகாரத்தின் மூலம் தெளிவாக நாம் புரிந்துகொள்ள முடியும். செங்கடலுக்கு முன்பாக இஸ்ரவேல் ஜனங்கள் நின்று கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு பின்னாக பார்வோனும் அவனுடைய சேனையும் வருகிறது. அதைக் கண்டு ஜனங்கள் முறுமுறுக்க ஆரம்பித்துவிட்டார்கள். நாங்கள் எகிப்திலே மரித்திருந்தாலும் பரவாயில்லை, எங்களை எதற்காக இங்கே கொண்டு வந்தீர்கள் என்று அவர்கள் முறுமுறுக்கும்பொழுது **"மோசே ஜனங்களை நோக்கி: பயப்படாதிருங்கள், நீங்கள் நின்று கொண்டு இன்றைக்குக் கர்த்தர் உங்களுக்குச் செய்யும் இரட்சிப்பைப் பாருங்கள், இன்றைக்கு நீங்கள் காண்கிற எகிப்தியரை இனி என்றைக்கும் காணமாட்டீர்கள். கர்த்தர் உங்களுக்காக யுத்தம் பண்ணுவார், நீங்கள் சும்மாயிருப்பீர்கள்"** என்றான் - **யாத். 14:13,14** மோசே புலம்புவதை பார்த்த கர்த்தர், மோசேயை நோக்கி: நீ என்னிடத்தில் முறையிடுகிறது என்ன? புறப்பட்டுப் போங்கள் என்று இஸ்ரவேல் புத்திரருக்குச் சொல்லு என்கிறார்.

**அப்பொழுது இஸ்ரவேலரின் சேனைக்கு முன்னாக நடந்த தேவதூதனானவர் விலகி, அவர்களுக்குப் பின்னாக நடந்தார். அவர்களுக்கு முன் இருந்த மேகஸ்தம்பமும் விலகி, அவர்கள் பின்னே நின்றது.**

**அது எகிப்தியரின் சேனையும் இஸ்ரவேலரின் சேனையும் இராமுழுதும் ஒன்றோ**

**டொன்று சேராதபடி அவைகள் நடுவில் வந்தது, எகிப்தியருக்கு அது மேகமும் அந்தகாரமுமாய் இருந்தது. இஸ்ரவேலருக்கோ அது இரவை வெளிச்சமாக்கிற்று.**

**மோசே தன் கையைச் சமுத்திரத்தின்மேல் நீட்டினான்; அப்பொழுது கர்த்தர் இராமுழுதும் பலத்த கீழ்காற்றினால் சமுத்திரம் ஒதுங்கும்படி செய்து, அதை வறண்டுபோகப்பண்ணினார், ஜலம் பிளந்து பிரிந்துபோயிற்று.**

**இஸ்ரவேல் புத்திரர் சமுத்திரத்தின் நடுவாக வெட்டாந்தரையிலே நடந்துபோனார்கள், அவர்கள் வலதுபுறத்திலும் அவர்கள் இடதுபுறத்திலும் ஜலம் அவர்களுக்கு மதிலாக நின்றது. - யாத்தி. 14:19-22**

இஸ்ரவேல் ஜனங்களுக்காக கர்த்தர் அனைத்தையும் இங்கு மாற்றி நடத்தினார். ஜனங்களால் அதை புரிந்துக்கொள்ள முடியவில்லை. கர்த்தர் நம்மை விட்டு போய்விட்டார், மேக ஸ்தம்பமும், அக்கினி ஸ்தம்பமும் போய்விட்டது என்று பயந்திருப்பார்கள். ஏனென்றால் இந்த ஜனங்கள் நடக்கும்பொழுது அக்கினி ஸ்தம்பமும், மேக ஸ்தம்பமும் முன்பாக சென்றாக வேண்டும். அப்பொழுதுதான் இவர்களால் போக முடியும். ஆனால் இங்கு அனைத்திலும் ஒரு மாற்றம் ஏற்பட்டது.

பரிசுத்த ஆவியானவர் மேக ஸ்தம்பமாக, அக்கினி ஸ்தம்பமாக அவர்கள் பின்னாக சென்றார். ஏனென்றால் எகிப்தியருடைய சேனையும், இஸ்வேலரின் சேனையும் ஒன்றோடொன்று கலக்கக் கூடாது. இஸ்ரவேலர் யாரும் எகிப்திற்கு திரும்பி ஓடி விடக்கூடாது. கொஞ்சம் இடைவெளி கிடைத்தால் கூட அத்தனை பேரும் மோசேயை அப்படியே விட்டுவிட்டு பார்வோனின் காலில் விழுந்து விடுவார்கள். கர்த்தர் அங்கே இடையில் ஒரு தடுப்பை வைத்தார். அடுத்து இரவு முழுவதும் பலத்த கீழ்க்காற்றினால் சமுத்திரம் ஒதுங்கும்படி செய்து அதை வறண்டு போகப்பண்ணுகிறார். ஜலம் பிரிந்து போயிற்று. சமுத்திரம் பிளந்தது. ஆனால் சேரிலும், சகதியிலும் இஸ்ரவேல் ஜனங்கள் நடக்கவில்லை, வெட்டாந்தரையில் நடந்தார்கள். **"இதோ, நான் புதிய காரியத்தைச் செய்கிறேன்; இப்பொழுதே அது தோன்றும், நீங்கள் அதை அறியீர்களா? நான் வனாந்தரத்திலே வழியையும், அவாந்தர வெளியிலே ஆறுகளையும் உண்டாக்குவேன்" ஏசாயா 43:19.**

பிரியமானவர்களே! நாம் சேவிக்கிற நம் தேவனுடைய வல்லமையை இங்கே பார்க்கிறோம். இதைப் பார்க்கும்பொழுது இங்கே ஒரு புதிய கட்டமைப்பு (Restructuring) தேவைப்பட்டது. செங்கடலை பிளந்தார், கடல் நடுவே வெட்டாந்தரை உண்டானது. பார்வோனை வர வைத்தார், அக்கினி ஸ்தம்பம், மேக ஸ்தம்பம் பின்னாக போனது. இந்த காரியங்கள் யாவும் நடக்கும் வரைக்கும் அமைதியாக இருப்பது தான் இவர்கள் வேலை. ஆனால் அந்த ஜனங்கள் அப்படி இல்லை, புலம்பி கொண்டே தான் இருந்தார்கள். இஸ்ரவேல் ஜனங்கள் இரவு முழுவதும் நடந்து பாதுகாப்பாய் வந்து சேர்ந்தார்கள். கிழக்கு வெளுக்கின்றது, தண்ணீருக்கு மேலே கரத்தை நீட்டியவுடன் பிரிந்திருந்த தண்ணீர் ஒன்றுசேர்ந்து திரும்பவும் சமுத்திரமானது. அந்த கடல் எகிப்தியரை திரும்பவும் மூடினது. இது தான் சர்வ வல்லமையுள்ள தேவன் செய்த Re structuring வேலையாகும். மறு நாள் இந்த இடத்தில் இப்படி ஒரு சம்பவம் நடந்தது என்று யாராலும் கண்டுபிடிக்கவே முடியாது. **கர்த்தர் கட்டமைக்கும் பொழுது எல்லாவற்றையும் புதியதாக கட்டமைக்கிறார்.**

அன்பான வாசகர்களே! இயேசுகிறிஸ்து இந்த உலகத்திற்கு அனுப்பப்படுவதற்கு முன்பு **மாற்கு 1:2-6; ஏசாயா 40:3-ம்** வசனங்களில் என்னுடைய தூதனானவனை அனுப்புகிறேன் என கூறுகின்றார். கர்த்தருக்கு வழியை ஆயத்தம் பண்ணுவதற்கு வந்தவனே யோவான்ஸ்நானன். ஆவிக்குரிய பிரகாரமாக பார்ப்பீர்கள் என்றால் அங்கே ஒரு கட்டமைப்பு (Restructuring) வேலை நடந்தது.

ஜனங்கள் மேசியாவிற்காக பல வருடங்கள் காத்திருக்கிறார்கள். இயேசு கிறிஸ்து தான் மேசியாவாக வரப்போகிறார் என்று ஜனங்களுடைய இருதயத்தை ஆயத்தப்படுத்துவதற்காகவே யோவான்ஸ்நானன் அனுப்பப்பட்டார். **அவன்: என்னிலும் வல்லவர் ஒருவர் எனக்குப்பின் வருகிறார், அவருடைய பாதரட்சைகளின் வாரைக் குனிந்து அவிழ்க்கிறதற்கும் நான் பாத்திரன் அல்ல. நான் ஜலத்தினால் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்தேன், அவரோ பரிசுத்த ஆவியினால் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார் என்று பிரசங்கித்தான் - மாற்கு 1 : 7, 8** இயேசு பிறப்பதற்கு முன்பு பூமியில் ஒரு புதிய கட்டமைப்பு (Re structuring) வேலை (ஆயத்தப் பணி) நடக்கின்றது. **பிதாக்களுடைய இருதயங்களைப் பிள்ளைகளிடத்திற்கும், கீழ்ப்படியாதவர்களை நீதிமான்களுடைய ஞானத்திற்கும் திருப்பி, உத்தமமான ஜனத்தைக் கர்த்தருக்கு ஆயத்தப்படுத்தும்படியாக, அவன் எலியாவின் ஆவியும் பலமும் உடையவனாய் அவருக்கு முன்னே நடப்பான் என்றான் - லூக். 1: 17**

அன்பான சகோதர, சகோதரிகளே! **கர்த்தர் உங்கள் வாழ்க்கையில் ஒன்றை வாக்குப் பண்ணி இருக்கிறார் என்றால் தரித்து நின்று அவரிடமிருந்து வருகின்ற ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ள வேண்டும். அதே நேரத்தில் நீங்கள் அவருக்காக பொறுமையுடன் காத்திருக்கும் பொழுது அவர் உங்கள் வாழ்க்கையை புதியதாக கட்டமைக்கிறார்.**

## 2. தரித்து நில்! உன் வாழ்க்கையை கர்த்தர் மறுசீரமைப்பார்

அடுத்ததாக நீங்கள் **"தரித்து நின்று அமைதியாக இருக்கும்பொழுது, ஏற்கனவே சீர்கெட்டுள்ளதை எடுத்துப் போட்டுவிட்டு நேர்த்தியான முறையில் உங்கள் வாழ்க்கையையும், சூழ்நிலைகளையும் சீரமைக்கிறார்"** மறுகட்டமைப்பதும் மறுசீரமைப்பதும் முற்றிலும் வித்தியாசம். **(Restructuring)** மறுகட்டமைப்பது என்றால் பழையதை புதிதாக மாற்றி கட்டுவது. **(Realigning)** மறுசீரமைப்பது என்றால் ஏற்கனவே இருக்கும் வரிசைகளை, ஒழுங்குகளை மாற்றுவது. உதாரணமாக ஒரு பாடல் குழுவில் நன்றாக பாடுகிறவர்கள் முன் வரிசையில் நிற்பார்கள். அந்த பாடல் குழுவின் தலைவர் அல்லது நடத்துபவர் வந்து முன் புறத்தில் இருப்பவர்களை பின் வரிசையில் நிற்க வைப்பார். பின் வரிசையில் இருப்பவர்களை முன் கொண்டுவந்து ஓரத்தில் இருத்துவார். நடுவில் இருப்பவர்களை கடைசி வரிசைக்கு கொண்டு போய் நிறுத்துவர். இது தான் **Realigning. தேவன் ஒருபோதும் ஒருவனை வெறுமனே தன்னுடைய பிள்ளை என்று சொல்வதில்லை. தம்முடைய பிள்ளை என்று அழைக்கும் முன் உங்களுக்குள் ஒரு மாற்றத்தை கொடுப்பதுடன், உலகத்தையே நமக்காக மாற்றுகிறவராக இருக்கிறார். அதை நீங்கள் நன்றாக புரிந்துகொள்ள வேண்டும்.**

தம்முடைய ஜனங்களுக்காக தேசங்களையே மாற்றி அமைத்தவர் நம்முடைய தேவன். யோசேப்பின் வாழ்க்கையிலும் கர்த்தர் சில காரியங்களை மாற்றி அமைக்கிறார். எப்படியென்றால் அவன் தன் சகோதரர்களால் அடிமையாக விற்கப்பட்டான், அதன்பின் அவனை எகிப்துக்குக் கொண்டு போயினர். போத்திபார் வீட்டின் விசாரணைக்காரனாயிருக்கிறான். அதன்பின் அநியாயமாய் சிறைச்சாலைக்குள் தள்ளப்படுகிறான். ஆபிரகாமுக்கு கர்த்தர் கொடுத்த வாக்குத்தத்தம் நிறைவேற வேண்டும் என்றால் யோசேப்பு சிறையில் இருந்து வெளியே வர வேண்டும். அதற்காகவே கர்த்தர் பார்வோனுக்கு ஒரு சொப்பனத்தை வர வைக்கின்றார். அவசரம் அவசரமாக சிறைச்சாலை கிடங்கிலிருந்த வனை அழைத்துக்கொண்டு வருகிறார்கள். தவறே செய்யாத என்னை ஏன் சிறையில் வைத்தார்கள் என்று யோசேப்பு நினைத்திருக்கலாம். பலருடைய வாழ்க்கை யோசேப்பிற்காக மாற்றப்பட்டது. சுயம்பாகியும், பானபாத்திரக்காரனும் சிறைச் சாலையில் தள்ளப்பட்டார்கள். சுயம்பாகி தூக்கி லிடப்பட்டான். யோசேப்பு சொன்னது போலவே, பானபாத்திரக்காரன் விடுதலையானான். ஆனால் அவனோ யோசேப்பை முற்றிலும் மறந்து போனான். பார்வோன் சொப்பனத்தின் அர்த்தம் தெரியாமல் கலங்கினபோது பானபாத்திரக்காரனுக்கு கர்த்தர் முன்நடந்ததை ஞாபகப்படுத்துகிறார். பானபாத்திரக் காரன் ஐயோ நான் மறந்துவிட்டேன், தவறு செய்துவிட்டேன். நான் சிறைச்சாலையில் இருக்கும் பொழுது ஒரு பிள்ளையாண்டான் என்னுடைய சொப்பனத்திற்கும், சுயம்பாகியின் சொப்பனத்திற்கும் அர்த்தம் சொன்னான். அவன் சொன்னது போலவே நடந்தது. நீர் என்னை உயர்த்தினீர், அவனை தூக்கில் போட்டீர் என மறந்ததை ஞாபகத்திற்கு கொண்டு வருகிறான். யோசேப்பிற்காக இங்கே இவர்கள் வாழ்க்கையிலே கர்த்தர் இடைபடுகின்றார். அவர்களுக்கு கர்த்தர் யார் என்றே தெரியாது. **இதிலிருந்து நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டிய முக்கியமான காரியம், உங்களை கர்த்தர் தெரிந்து கொண்டு உயர்த்த முற்பட்டால் உங்களுக்காக எந்த ஒரு காரியத்தையும் செய்ய அவர் தயங்க மாட்டார்.**

இதேபோன்ற ஒரு காரியத்தை மத்தேயு இரண்டாம் அதிகாரத்தில் பரிசுத்த ஆவியானவர் மிக அழகாக கட்டமைக்கிறார். ஏரோது ராஜாவாக இருந்தான். சாஸ்திரிகள் கிழக்கிலிருந்து இயேசுவை பார்க்க சென்றார்கள். உடனே ஏரோது **"நீங்கள் பார்த்துவிட்டு குழந்தை எங்கே இருக்கிறது"** என்று சொல்லுங்கள் நானும் குழந்தையை வந்து வணங்குகிறேன் என்கிறான். ஆனால் 12ம் வசனத்தி லிருந்து வாசிக்கும் பொழுது **"சாஸ்திரிகளுக்கு சொப்பனத்தில் தேவன் காட்சியளித்து நீங்கள் திரும்ப ஏரோதிடம் போகாதீர்கள், போனால் ஏரோது இந்த பிள்ளையை கொலை செய்து**

**விடுவான்"** என்கிறார். எனவே சாஸ்திரிகள் வேறு வழியில் போய் விட்டார்கள். எனினும் ஏரோது அமைதியாக இருக்கவில்லை. 2 வயதுக்குட்பட்ட குழந்தைகளை கொல்ல வகை தேடினான். உடனே தேவதூதன், யோசேப்பிற்கு சொப்பனத்தில் தோன்றி **"ஏரோது எல்லா குழந்தைகளையும் கொல்லப் போகிறான் நீ எழும்பி எகிப்திற்கு சென்றுவிடு"** என்கிறார். அந்த நேரத்தில் ஆயிரக்கணக்கான குழந்தைகளை ஏரோது கொன்றுபோட்டான். முதல் இரத்த சாட்சிகள் இந்த ஒன்றுமறியாத அருமை குழந்தைகளே! அதன்பிறகு தூதன் யோசேப்பிற்கு தோன்றி **"எகிப்திலிருந்து புறப்படு, பிள்ளையை கொலை செய்ய தேடினவர்கள் மரித்துப் போனார்கள்"** என்றவுடன் திரும்பவும் பிள்ளையை அழைத்துக் கொண்டு யூதோவிற்கு வருகிறான். அங்கு வரும் பொழுது அர்கெலாயு என்கிறவன் அரசாளுகிறான் என்பதை கேள்விப்பட்டு நாசேத்து என்னும் ஊரிலே வாசம்பண்ணுகிறான். **"நாசரேத்து என்னும் ஊரிலே வந்து வாசம்பண்ணினான். நசரேயன் என்னப்படுவார் என்று, தீர்க்க தரிசிகளால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இப்படி நடந்தது" - மத்தேயு 2: 23**

ஒரு குழந்தை தப்புவிக்கப்படுவதற்காக அனைத்து சூழ்நிலைகளையும் கர்த்தர் மாற்றி சீரமைக்கின்றார். பிரியமானவர்களே! கர்த்தர் உங்கள் வாழ்க்கையிலும் ஒரு திட்டத்தை செயல்படுத்தும் பொழுது உலகத்தின் சரித்திரத்தையே மாற்றி அமைப்பார். தேவன் தம்முடைய பிள்ளையை ஆசீர்வதிப்பதற்காக அவர்கள் வாழ்க்கையில் சம்மந்தப்பட்ட, சம்மந்தபடாத மற்றவர்களுடைய வரலாற்றையும் மாற்றி அமைக்கிறார். **God can realign the history of the world just to bless His child.**

தாவீதின் வாழ்க்கையிலும் நடந்த காரியங்களை நீங்கள் அறிவீர்கள். தாவீதிற்கு பிறகு சாலொமோனை ஆண்டவர் ராஜாவாக்குகிறார். இவன் மீது கர்த்தர் பிரியமாயிருந்தார். இவன் பாவத்தில் பிறந்தவன். பத்சேபாளுக்கும் தாவீதிற்கும் இவன் பிறந்தாலும் கர்த்தர் இவனை நேசித்தார். தாவீதிற்கு மொத்தம் 14 குமாரர்கள் இருந்தார்கள். சாலொமோன் பிந்தி பிறந்தவனே, அவன் ராஜாவாக மாறுவதற்கு எந்த வழிமுறையும் இல்லை. முதல் குமாரன் தான் ராஜாவாக அரசாள வேண்டும். அதோனியா, அப்சலோம், அம்னோன் என அனைவரும் இறந்துவிட்டார்கள். இவர்களை கர்த்தர் விலகும்படி செய்து சாலோமோனுக்கு நேர் வழியை உண்டாக்குகிறார். கர்த்தர் திட்டம் பண்ணினபடியே அவன் ராஜாவாக மாறினான்.

ஈசாக்கு ஆசீர்வாதமாக இருக்க வேண்டும் என்பதற்காக இஸ்மவேலை கர்த்தர் ஆசீர்வதித்து தள்ளி வைத்தார். ஆபிரகாமின் மறுமனை யாட்டியாகிய கேத்தூராளுக்கு பிறந்த பிள்ளைகளுக்கு, ஆபிரகாம் தான் உயிரோடிருந்தப்பொழுதே அவர்களுக்கு நன்கொடைகளை கொடுத்து வேறு தேசத்திற்கு அனுப்பிவிட்டான். **(ஆதி.25:6)** ஏனென்றால் ஈசாக்கை அவர் ஆசீர்வதிக்க வேண்டும். கர்த்தர் ஒருவரை ஆசீர்வதிப்பதற்காக மற்றவர் களுடைய சரித்திரத்தையே மாற்றுகிறார். அவர்தான் நாம் சேவிக்கிற மகா வல்லமையுடைய கர்த்தர். உலகத்தில் ஒரு சிலர் வாஸ்து பார்த்து தங்களுடைய ஆசீர்வாதத்திற்காக வீட்டின் அமைப்புகளை சீரமைக்கிறார்கள். ஆனால் தேவன் நமக்காக உலகத்தில் உள்ள அனைத்தையும் மாற்றியமைக்க முடியும்.

செஸ் விளையாட்டில் ராஜா தான் மிக முக்கியமான காய் ஆகும். இந்த ராஜா காயை காப்பாற்றுவதற்காக ராஜாவை இழக்காதபடி, **check-mate** வராதபடிக்கு முன் நிற்கும் மாவீரர் காய்களை பலியாக கொடுத்து விடுவார்கள். அது மாத்திரமல்ல அந்த சதுரங்க கட்டையில் இருக்கும் குதிரை, யானை, ராணி, மந்திரி போன்ற அத்தனை காய்களும் இந்த ராஜாவை காப்பாற்றவே செயல்படும். ராஜாவை இழந்துவிட்டால் நாம் தோற்றுவிட்டோம் என்று அர்த்தம். இந்த சதுரங்க விளையாட்டில் ராஜாவை காப்பாற்ற மற்ற சதுரங்க காய்கள் எப்படி நகர்த்தப் படுகிறதோ, அதேப்போலத்தான் உங்கள் வாழ்க்கையில் நீங்கள் தரித்து நிற்கும்போது கர்த்தர் உங்களை சுற்றி இருக்கும் சூழ்நிலைகளையும், மனிதரையும் **(Realign)** மறுசீரமைப்பார்.

கடைசியாக, கர்த்தர் நம்மிடம் **"தரித்து நில்லுங்கள், காத்திருங்கள்"** என்று சொல்வது உங்களை அவருடைய வல்லமையால் திரும்பவும் திரும்பவும் நிரப்புவதற்காகவே. ஏன் அவ்வாறு நிரப்புகிறார்? உங்களுக்காக அவர் வைத்திருக்கின்ற வேலை, திட்டம் மிகவும் பெரியது. கர்த்தருடைய வேலைக்கு ஏற்ற மாதிரி நீங்கள் அவருடைய வல்லமையால் நிரம்ப வேண்டும். தேவனுடைய திட்டப்படி ஆசீர்வாதத்தை சுதந்தரிக்க வேண்டும் என்றால் ஒரு சாதாரண மனுஷனாக இருக்க கூடாது என்பதற்காக தம் வல்லமையால் திரும்ப, திரும்ப நிரப்புகிறார். **He replenishes our soul.** நம்

ஆத்துமாவை திரும்பவும் உற்சாகப்படுத்தி, குறைந்து போன நம் ஆவிக்குரிய சத்துவத்தை திரும்பவும் தம் வல்லமையினால் நிரப்புகிறார்.

தரித்து நிற்க வேண்டும் என்றால் சும்மா தூங்கிக் கொண்டிருப்பதல்ல, தரித்து நிற்கும் பொழுது அவருடைய பிரசன்னத்தில் மூழ்கி இருக்க வேண்டும். அவர் சமூகத்தில் காத்திருக்க வேண்டும். அவருடைய முகத்தையே பார்த்துக் கொண்டிருக்க வேண்டும். நாம் அவருக்காக காத்திருக்கும் பொழுது பல சமயம் சோர்ந்துவிடுவோம். தாவீது சோர்ந்து போனான். எனவே தான் அநேக சங்கீதங்களில் புலம்பி இருக்கிறான். தேவன் அவனை அபிஷேகம் செய்தார். ஆனால் தான் ராஜாவாக போவது எப்பொழுது என்று தாவீதிற்கு தெரியாது. ஆனாலும் சவுலை கொன்று விட்டு தான் ராஜாவாக வேண்டும் என்று அவன் நினைக்கவே இல்லை. தாவீதை கர்த்தர் காத்திருக்க மட்டும் வைக்கவில்லை. ஒரு பக்கம் யூதர்கள், இன்னொரு பக்கம் சவுல், மற்றொரு பக்கம் பெலிஸ்தியர்கள் எல்லோரும் சேர்ந்து அவனை துரத்துகிறார்கள். கொலை செய்ய வேண்டும் என்று நினைத்தார்கள். அந்த நிலையில் தாவீதின் உள்ளம் எப்படி சோர்ந்து போய் இருந்திருக்க வேண்டும்.

என் ஆத்துமாவே ஏன் எனக்குள் தியங்குகிறாய் என்று சொல்லும் அளவிற்கு சோர்ந்து போகிறான். ஆனாலும் பூமி நிலைமாறினாலும் பர்வதங்கள் நடுசமுத்திரத்தில் பெயர்ந்து போனாலும் பயப்படேன். கர்த்தர் நிச்சயம் சகாயம் பண்ணுவார் என அறிக்கை செய்வதை சங்கீதம் 46ல் வாசிக்கிறோம். இக்கட்டான நிலையிலும் தாவீது தன் நம்பிக்கையை விட்டு விலகவே இல்லை. நம்பிக்கை, விசுவாசம் உங்களுக்குள் வரவேண்டும் என்றால் அவர் பிரசன்னத்தை இறுகப் பிடிக்க வேண்டும். அவருடைய முகத்தையே பார்க்க வேண்டும். அவரது முகத்தை விட்டு சற்று திரும்பினீர்கள் என்றால் சோர்வு உங்களுக்குள் வந்துவிடும். அதுமட்டுமல்ல, துக்கமும், அழுகையும் உங்கள் இருதயத்தை நிரப்பி விடும். அதனால் தான் அத்தனை தேவ மனிதர்களும் கர்த்தருடைய திட்டங்களுக்கு காத்திருக்க முடிந்தது. ஏன்? அவர்கள் காத்திருக்கும் நேரத்தில் சோர்வடைய வில்லை. **அவர்கள் வெறுமையான ஒரு பாத்திரமாக இல்லாமல், தேவனுடைய பிரசன்னத்தினால், வல்லமையினால் நிரப்பப்பட்டவர்களாய் இருந்தார்கள். They were replenished with His power, His presence.**

மோசேயின் வாழ்க்கையைக் குறித்து பார்ப்போம். மோசே கர்த்தருடைய முகத்தை தத்ரூபமாய் பார்த்தவன். **என் வீட்டில் எங்கும் அவன் உண்மையுள்ளவன். நான் அவனுடன் மறை பொருளாக அல்ல, முகமுகமாகவும் பிரத்தியட்ச மாகவும் பேசுகிறேன், அவன் கர்த்தரின் சாயலைக் காண்கிறான். (எண். 12:7-8)** நீங்கள் இந்த காரியத்தை சற்று சிந்தித்து பாருங்கள். மோசே கர்த்தருடைய சத்தத்தை கேட்டான், அவருடைய முகத்தை பார்த்து இருக்கிறான் என்றால் அது எப்படிப்பட்ட ஒரு உன்னத அனுபவம். படிக்கும் பொழுதே, கேட்கும் பொழுதே ஆச்சரியமாக உள்ளது. மோசே கர்த்தருடைய சமூகத்திற்கு போகும் பொழுது 40 நாள் புசியாமலும், குடியாமலும் இருந்து தேவன் சொல்வதை கேட்கும்படி போகிறான். **யாத்தி. 24: 15-18. மோசே இறங்கி வரும்பொழுது அவனுடைய முகம் பிரகாசித்ததை அவன் அறியாதிருந்தான். (யாத்தி 34:28-35) தேவனுடைய முகம் எப்படி பிரகாசமாய் இருந்ததோ அதே பிரகாசம் மோசேயின் மீது காணப்பட்டது. அது தான் தரித்து நின்று அவர் முகத்தை பார்க்கிற ஒரு அனுபவம். தேவனுடைய பிரசன்னம் அவனுக்குள் இறங்கினது. மோசே தன்னுடைய சரீரத்திற்குள், ஆத்துமாவிற்குள் தன்னுடைய ஆவிக்குள் கர்த்தருடைய மகிமையை சுமந்து வந்தான்.** அதனால் தான் அத்தனை ஏராளமான மக்களை அவனால் நடத்த முடிந்தது. மோசே அந்த ஜனங்களை வழி நடத்தின நாள் முழுவதும் ஒருவனும் அவனுக்கு விரோதமாக நிற்க முடியவில்லை. ஏனென்றால், அவன் கர்த்தருடைய சமூகத்தில் காத்திருந்ததுதான் அதின் இரகசியம். வேதத்திலே இயேசுகிறிஸ்துவோடு ஒப்பிட்டு பேசப்பட்ட ஒரே மனுஷன் இந்த மோசே தான். மோசேயை குறித்து அவர் சொல்லும் பொழுது **"உன்னைப் போல ஒரு தீர்க்கதரிசியை அந்த ஜனங்களுக்குள் அனுப்புவேன்" (அப்போஸ்.3:22)** என்கிறார்.

அன்பானவர்களே! மோசேயினுள் காணப் பட்ட அந்த மகிமை, வல்லமை உங்களுக்குள்ளும் இருக்க வேண்டும். நீங்களும் கர்த்தருடைய சமூகத்தில் காத்திருக்கும் பொழுது உன்னத வல்லமையை பெற்றுக்கொள்வீர்கள். அவரை மறந்து வீண் காரியங்களுக்கு, உலகப் பிரகாரமான காரியங்களுக்கு இடம் கொடுக்காதீர்கள். அப்படி இடம் கொடுப்பீர்கள் என்றால் சோர்ந்து போவீர்கள். உலகத்தின் பிரச்சனைகள் உங்களை சோர்வடையச் செய்யும். அடுத்த நிமிடம் நாம் கால் எடுத்து வைக்க முடியுமா? அடுத்த நாள் படுக்கையிலிருந்து எழும்ப முடியுமா? அடுத்த நாள் கர்த்தருக்காக ஏதாவது ஒரு

காரியத்தை செய்ய முடியுமா? என எல்லாமே ஒரு கேள்விக்குறியாகிவிடும். ஆனாலும் **"அவருக்காக தரித்து நிற்கும்பொழுது அவருடைய முகத்தை பார்க்கும் பொழுது நாம் வெட்கப்பட்டுப் போக மாட்டோம்"**

பிரியமானவர்களே! இப்பொழுது நீங்கள் வாசித்த காரியம் பழைய ஏற்பாட்டின் மகிமை. இதேபோன்ற காரியம் அப்போஸ்தலர் காலத்திலும் நடந்தது. இயேசுகிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டபொழுது சீஷர்கள் எப்படிப்பட்ட சூழ்நிலையில் இருந்தார்கள்? வஸ்திரத்தை கூட விட்டுவிட்டு சென்றுவிட்டார்கள். ஏன்? தன்னையும் பிடித்து சிலுவையில் அறைந்து விடுவார்கள் என்ற காரணத்திற்காக பயந்து ஓடினார்கள். இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்து அவர்களுக்கு காட்சியளித்தப்பின் அவர் உன்னதத்திற்கு சென்றபொழுது, **"நீங்கள் உன்னதத்திலிருந்து பிதாவானவர் அனுப்புகிற பரிசுத்த ஆவியானவரை பெற்றுக்கொள்ளும் வரைக்கும் எருசலேமில் காத்திருங்கள்"** என்றார். அந்த இடத்தில் இருக்க முடியுமா? அங்கு தான் இயேசுவை சிலுவையில் அறைந்தார்கள். சிலுவையில் அறைந்த இடத்தில் காத்திருங்கள் என்று கர்த்தர் சொல்கிறாரே என்று சீஷர்கள் சற்று யோசித்திருப்பார்கள்! அப்போஸ்தலர் 1ம் அதிகாரத்தை வாசிக்கும் பொழுது இயேசுவின் தாயாகிய மரியாளும், சீஷர்கள் 120 பேரும் மேல் வீட்டறையில் கூடி ஜெபத்திலும், வேண்டுதலிலும் தரித்திருந்தார்கள். 50வது நாள் - பெந்தேகோஸ்தே நாளில் வானத்திலிருந்து அக்கினிமயமான நாவுகள் அவர்கள் மேல் வந்து அமர்ந்தது. பரிசுத்த ஆவியானவர் எப்படி ஒரு மனுஷனை மாற்ற முடியும், ஆட்கொள்ள முடியும் என்று அப்போஸ்தலர் 2ம் அதிகாரத்திலே நமக்கு சாட்சியாக, ஆதாரமாக எழுதப்பட்டிருக்கிறது. வஸ்திரத்தை விட்டுவிட்டு நிர்வாணமாய் ஓடினவன், அங்கே அக்கினி மயமான நாவால் நிரப்பப்பட்டான். காத்திருந்த அனைவரும் பரிசுத்த ஆவியின் வல்லமையால் நிரப்பப் பட்டார்கள். **அப்போஸ்தலர் 2:1-6** வசனங்களை வாசிக்கும் பொழுது இவர்கள் அந்நிய பாஷைகளில் கர்த்தருடைய மகத்துவங்களை பேசுகிறதை கேட்டு அங்கிருந்த ஜனங்கள் எல்லாருக்கும் கலக்கம் உண்டானதாக எழுதப்பட்டுள்ளது. இவர்கள் யார்? இப்படி திடிரென்று வந்து இடி முழக்கம் போல சத்தம் கேட்கின்றதே, அந்த இடமே அதிருகின்றதே என்கின்றார்கள். பரிசுத்த ஆவியால் நிரப்பப்படும் பொழுது, நாம் தரித்து நிற்கும் பொழுது ஜெபத்திலும், வேண்டுதலிலும் இருக்கும் பொழுது கர்த்தருடைய வல்லமை நம் மீதும் இறங்கும். அப்படி வல்லமை இறங்கும் பொழுது நாம் கர்த்தரிடமிருந்து சீரமைக்கப்பட்ட அற்புதங்களை சுதந்தரிப்பதற்கு, கட்டமைத்திருக்கிற ஆசீர்வாதங்களை பெற்றுக் கொள்வதற்கு நாம் தயாராக ஆயத்தமுள்ளவர்களாய் மாற்றப்படுகிறோம் இப்படிப்பட்ட சுதந்தரம், ஆசீர்வாதம், ஒரு உன்னத அனுபவம் உங்களுக்கு வேண்டும் என்றால் நீங்களும் காத்திருக்க, தரித்து நிற்க கற்றுக்கொள்ள வேண்டும். நீங்கள் சோர்ந்து போவீர்கள் என்றால் எந்த ஆசீர்வாதத்தையும் சுதந்தரித்துக் கொள்ள முடியாது.

நன்றாக புரிந்துகொள்ளுங்கள்! **Be still** என்கிற ஒரு வார்த்தையில் எத்தனை அர்த்தங்கள் அடங்கியிருக்கிறது. **"நீங்கள் அமர்ந்திருந்து நானே தேவன் என்று அறிந்து கொள்ளுங்கள்"** எதற்காக அமர்ந்திருக்க வேண்டும். **He is restructuring your life.** அவர் உங்கள் வாழ்க்கையை புதிதாய் கட்டமைக்கிறார். **He is realigning the situations around you.** உங்களை சுற்றி இருக்கிற மனுஷரை, சூழ்நிலைகளை அவர் சீரமைக்கிறார். **He replenishes us with His power.** அவருடைய வல்லமையினால் நம்மை திரும்பவும் நிரப்புகிறார். அவர் சகலத்தையும் திட்டம் பண்ணினவர். அவர் உங்களை பராமரித்து, காத்து, ஆசீர்வதிப்பார். எனவே இதை வாசிக்கும் அன்பானவர்களே! **Be still** என்கிற அந்த வார்த்தையை பிடித்துக்கொள்ளுங்கள். தேவ பிரசன்னத்தில், அவருடைய சமூகத்தில் காத்திருக்க கற்றுக்கொள்ளுங்கள்! தேவ ஆசீர்வாதத்தை, வல்லமையை சுதந்தரித்துக்கொள்ளுங்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

**Telugu Whats App No: 91770 87860**

**Tamil Whats App No: 95004 87059**

உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்.

2 கொரிந்தியர் 9:7

## அன்பரின் ஊழியத்திற்கு காணிக்கை அனுப்புவதற்கான எளிய வழிகள்

மணியார்டர் (MO) / காசோலை (cheque) / வரைவோலை (DD)
Online Donation (Website)
Bank Account / QR Code
UPI / Google pay / Paytm / Phonepe

UPI   Google Pay   Paytm   PhonePe

இந்த QR code–ஐ உங்கள் செல்போனில் ஸ்கேன் செய்து அல்லது 95004 87061 என்ற எண் மூலமும் பணப்பரிமாற்றம் செய்யும் செயலிகள் மூலமாகவும் காணிக்கை அனுப்பலாம்.

### வங்கிக் கணக்குகளின் விபரம்




| Dr. ANANDA STIRA | ANBARIN OOZHIYAM | MINISTRY OF JESUS |
|---|---|---|
| A/c no. 10848469699 | A/c no. 10848559426 | A/c no. 10848474869 |

IFS Code: SBIN 0000930
State Bank of India, Cantonment, Trichy Main Branch.

காணிக்கையை நீங்கள் அனுப்பியவுடன் எங்களது 95004 87061 என்ற எண்ணிற்கு தொடர்புக்கொண்டு காணிக்கை அனுப்பிய விபரத்தை தெரியப்படுத்துங்கள். நேரில் அல்லது கூட்டங்களில் எங்களை சந்தித்து காணிக்கையை தரவிரும்புகிறவர்கள் கீழ்க்கண்ட எண்ணிற்கு தொடர்புக்கொள்ளுங்கள். (10.00 AM - 6.00 PM)

**Cell no. 94888 45627, 80987 42638**

உங்களுடைய உற்சாகமான காணிக்கைகள், தசமபாக காணிக்கைகள், பொருத்தனை காணிக்கை மற்றும் ஸ்தோத்திர காணிக்கையை அனுப்பி அன்பரின் ஊழியத்தை தாங்குங்கள்.

கர்த்தர் நிச்சயமாக இதற்குரிய பலனை பல ஆயிரம் மடங்காக தந்து உங்களை ஆசீர்வதிப்பார்!

அன்பரின் ஊழியத்தின் முகவரி : அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலம்
10வது குறுக்குத் தெரு மேற்கு விஸ்தரிப்பு, தில்லைநகர், திருச்சி – 620018.



# Praise Report
# துதி அறிக்கை

## மூளை காய்ச்சல் நீங்கி அற்புத சுகம்!



என் பெயர் வினோலியா. என் மகனுக்கு 3 நாளாக காய்ச்சல் இருந்தது. ஒரு நாள் இரவு நேரத்தில் வாயிலிருந்து நுரை தள்ளிய நிலையில் படுக்கையில் இருந்தான். உடனே மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். மகனை ICU-ல் அட்மிட் செய்தார்கள். அதன்பின் மகனுக்கு brain fever மாதிரி இருக்கிறது. ஆகவே தண்டு வடத்தில் ஒரு test எடுக்கனும். மூளைப்பகுதியில் ஸ்கேன் எடுத்து பார்க்கனும் என சொன்னார்கள்.

**தண்டுவட டெஸ்ட் இப்போது வேண்டாம். எனக்கு ஒரு நாள் அவகாசம் கொடுங்கள் என சொல்லிவிட்டு, உடனே அன்பரின் ஊழியத்திற்கு தொலைபேசி வாயிலாக தொடர்புக்கொண்டு என் மகனுக்காக ஜெபிக்கும்படி சொன்னேன். ஒரு ஊழியர் பாரத்துடன் ஜெபித்தார்கள். அதன்பின் மகனுக்கு இருந்த காய்ச்சல் அற்புதமாக முற்றிலும் நீங்கியது. நல்ல சுகம் உண்டானது. ஸ்கேன் ரிப்போர்ட்-ம் நார்மல் என வந்தது. ஆபத்தான நிலையை கடந்து சாதாரண நிலைக்கு வருவதற்கு ஒத்தாசை செய்த கர்த்தரை மனதார ஸ்தோத்தரிக்கிறேன். அன்பரின் ஊழியத்திற்கும் என்னுடைய நன்றியை தெரிவிக்கிறேன்.**

**- திருமதி. வினோலியா, இருங்களூர்.**

## மகளுடைய திருமண தடை நீங்கியது!



என் பெயர் பொ்னதத். என்னுடைய இரண்டாவது மகளுக்கு திருமணம் நடைபெறாமல் தொடர்ந்து தடையாகவே இருந்தது. அப்பொழுது திருச்சியில் நடைபெற்ற அற்புத குடும்ப ஆசீர்வாதக் கூட்டத்திற்கு நான் வந்து, **Dr. ஆனந்த ஸ்திரா** அவர்களிடம் என் மகளுடைய திருமணத்திற்காக ஜெபிக்கும்படி சொன்னேன். சகோதரர் பாரத்துடன் ஜெபித்து அனுப்பினார்கள்.

**தேவகிருபையால் தடை நீங்கி, மகளுடைய திருமணம் ஆசீர்வாதமாய் நடைபெற்றது. அதன்பின் மகளுக்கு மூன்று வருடங்களாக குழந்தையில்லை. அதற்காகவும் நான் கூட்டத்திற்கு வந்து பொருத்தனை யோடு ஜெபித்து சென்றேன். கர்த்தர் இரங்கி மகளுக்கு பெண் குழந்தையை தந்தார். கர்த்தரை மனதார துதிக்கிறேன். அத்துடன் என்னுடைய பொருத்தனை காணிக்கையை அன்பரின் ஊழியத்திற்கு தருகிறேன்.**

**- திருமதி. பொ்னதத், திருச்சி.**

## தீர்க்கதரிசனம் நிறைவேறியது!



என் பெயர் சாம் குருபாதம். 1991-ம் ஆண்டு திருச்சிக்கு சென்று **Dr. ஆனந்த ஸ்திரா** அவர்களை நேரில் சந்தித்தேன். அந்த நாளில் சகோதரர் அவர்கள் என்னை குறித்து விசாரித்துவிட்டு தீர்க்கதரிசனமாக கூறியது, **"உங்கள் நண்பர் ஒருவர் வேலை தருவதாக சொல்லியிருக்கிறார் அல்லவா அந்த வேலைக்கு நீங்கள் செல்ல வேண்டாம். ஆண்டவர் உங்களுக்கு வெளிநாட்டில் வேலை தருகிறார்"** என சொல்லி ஜெபித்து அனுப்பினார்கள். நானும் விசுவாசத்துடன் திரும்பி வந்தேன்.

**சகோதரர் மூலமாக கர்த்தர் சொன்ன வார்த்தையின்படியே எனக்கு 1991-ல் சிரியாவில் வேலை கிடைத்தது. 2012-ம் ஆண்டு வரை சிரியாவில் வேலைசெய்து பணி ஓய்வு பெற்றேன். இப்பொழுது ஆண்டவருக்கு ஊழியம் செய்து வருகிறேன். சகோதரர் மூலமாக என்னை நேர்த்தியாக வழிநடத்தி, உயர்த்திய கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறேன்.**

**- சகோ. சாம் குருபாதம், பாளையங்கோட்டை.**

## வீடு கட்டவும், கார் வாங்கவும் கர்த்தர் உதவி செய்தார்!



என் பெயர் பிரேமா. எனக்கு அன்பரின் ஊழிய மாதாந்திர பத்திரிக்கை வந்துக்கொண்டிருக்கிறது. அதில் வருகிற சாட்சிகளை படித்து கர்த்தரை ஸ்தோத்தரிப்பேன். எனக்கு சொந்த வீடு இல்லை. அதனால் **அன்பரின் ஊழிய பத்திரிக்கையில் வந்த சாட்சிகளைப் படித்து நானும் வீட்டிற்காக ஜெபித்தேன். கர்த்தர் அற்புதமாக நான் வீடு கட்ட உதவி செய்தார்.**

என் மகன் மும்பையில் கார் டிரைவராக வேலை பார்க்கிறான். **மகன் சொந்தமாக கார் வாங்கியவுடன் நான் அன்பரின் ஊழியத்திற்கு 10,000 ரூபாய் காணிக்கை தருவதாக பொருத்தனையோடு ஜெபித்தேன். கர்த்தர் அந்த ஜெபத்தையும் கேட்டு மகன் சொந்த கார் வாங்குவதற்கு தயை செய்தார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம். என்னுடைய பொருத்தனை காணிக்கையை அன்பரின் ஊழியத்திற்கு தருகிறேன்.**

**- திருமதி. பிரேமா, கோயில்பட்டி**

## 7 வருடத்திற்குப் பிறகு குழந்தை பிறந்தது!



என் பெயர் சரஸ்வதி. என் மகனுக்கு திருமணம் முடிந்து 7 ஆண்டுகளாக குழந்தை பாக்கியம் இல்லை. கடந்த வருடம் **திருநெல்வேலியில் நடைபெற்ற குடும்ப ஆசீர்வாதக் கூட்டத்திற்கு ஒரு சகோதரி என்னை அழைத்து வந்தார்கள். நான் கூட்டத்தில் கலந்துக்கொண்டு என் மகனுக்காக ஜெபித்து சென்றேன். கர்த்தர் என் கண்ணீரைத் துடைத்து மகனுக்கு குழந்தை பிறக்க தயை செய்தார். கர்த்தருக்கு கோடா கோடி ஸ்தோத்திரம்!**

**- திருமதி. சரஸ்வதி, தோட்டாக்குடி.**

# 9 ஆண்டுகளாக எந்த ஆலயத்திற்கும் செல்லாத மகன் கூட்டத்தில் கலந்துகொண்ட போது நடந்த அதிசயம்!



என் பெயர் லீதியாள் சந்திராள். என் மகன் சென்னையில் உள்ள ஒரு கம்பெனியின் வேலைக்கு செலக்ட் ஆகிவிட்டான். மாதந்தோறும் சம்பளம் வந்தது. ஆனால் ஒன்றரை வருடமாக எந்த புராஜக்ட்டிலும் அவனை சேர்க்கவில்லை. அதனால் வீட்டிலேயே இருந்தான்.

அத்துடன் கடந்த 9 ஆண்டுகளாக என் மகன் எந்த ஆலயத்திற்கும் செல்வது இல்லை. கடந்த மே மாதம் 13-ம் தேதி திருநெல்வேலியில் நடைபெற்ற குடும்ப ஆசீர்வாதக் கூட்டத்திற்கு போகலாம் என்று சொல்லி, என் மகனே என்னை அழைத்தான். எனக்கு ஆச்சரியமாக இருந்தது.

நானும் மகனும் கூட்டத்திற்கு வந்தோம். கூட்டம் முடிந்து **Dr. ஆனந்த ஸ்திரா** அவர்களிடம் என் மகன் சென்று வேலையைக் குறித்த காரியத்தை சொல்லி ஜெபித்து வந்தான். **ஜெபித்து வந்த 3-ம் நாளே அவனுக்கு கம்பெனியிலிருந்து அழைப்பு வந்தது. உங்களை ஒரு புராஜக்ட்டில் சேர்த்து இருக்கிறோம். உடனே சென்னைக்கு வரவேண்டும் என சொன்னார்கள். மகனும் சென்னைக்கு சென்று வேலையில் சேர்ந்து விட்டான். மகன் வாழ்வில் நடந்த இந்த அதிசயத்திற்காக கர்த்தரை மனதார ஸ்தோத்தரிக்கிறேன்.**

**- திருமதி. லீதியாள் சந்திராள், அம்பா சமுத்திரம்.**

# திருமண தடை நீங்கியது



என் பெயர் செல்வம். என் மகளுக்கு திருமணம் செய்ய 3 ஆண்டுகளாக அதிக முயற்சி செய்தோம். திருமணம் நடைபெறாமல் தடையாகவே இருந்தது. **திருநெல்வேலியில் நடைபெற்ற கூட்டத்திற்கு வந்திருந்து Dr. ஆனந்த ஸ்திரா அவர்களை சந்தித்து என் மகளுக்காக ஜெபிக்கும்படி சொன்னேன்.**

**சகோதரர் சொந்த தகப்பனைப் போல எங்களை நேசித்து மகளுக்காக ஜெபித்து அனுப்பினார்கள். கடந்த வருடம் ஜூலை மாதம் என் மகளுடைய திருமணம் ஆசீர்வாதமாய் நடந்து முடிந்தது. கர்த்தருக்கு ஸ்தோத்திரம். சகோதரர் அவர்களுக்கு என்னுடைய நன்றியை தெரிவிக்கிறேன்.** **- திருமதி. செல்வம், கீழசடைமான்குளம்.**

# இருதய பெலவீனம் மாறியது!



என் பெயர் ஜோஸப் கிறிஸ்டோபர். என் வாழ்வில் பலரிடம் நான் ஏமாற்றமடைந்து பல லட்சங்களை இழந்து விட்டேன். இதன் நிமித்தம் மனம் சோர்ந்து, முடிவில் என் இருதயம் மிகவும் பாதிக்கப்பட்டது. நான் இறந்து விடும் நிலைக்கு சென்றேன். அந்த நிலையில் **Dr. ஆனந்த ஸ்திரா அவர்கள் நடத்திய கூட்டத்தில் கலந்து கொண்டேன். என்ன ஆச்சரியம்! சகோதரர் ஜெபிக்கும் பொழுது கர்த்தருடைய வல்லமை எனக்குள் இறங்கினது. அந்த நேரத்தில் என் இருதய பெலவீனம் மாறி, பரிபூரண சுகம் அடைந்தேன். கர்த்தருக்கே மகிமை!.**

**- திரு.ஜோஸப் கிறிஸ்டோபர், ஐதராபாத்**

## குடிபழக்கத்திலிருந்து விடுதலை!



என் பெயர் ஜீவா. என் கணவர் பெயர் தனசீலன். அவர் 30 ஆண்டுகளாக குடிபழக்கத்திலிருந்து விடுதலை ஆக முடியாமல் அதிக கஷ்டப்பட்டார். முடிவில் தினந்தோறும் 1000 ரூபாய்-க்கு குடிக்கும் நிலைக்கு உள்ளானார்.

இதனால் என்ன செய்வது என தெரியாமல் கலங்கியிருந்த நேரத்தில் ஈரோட்டில் குடும்ப ஆசீர்வாதக்கூட்டம் நடைபெற்றது. அந்த கூட்டத்திற்கு என் கணவரை அழைத்து வந்தேன்.

**ஜெப வேளையில் Dr. ஆனந்த ஸ்திரா அவர்கள் என் கணவரின் தலைமேல் கை வைத்து ஜெபித்தார்கள். அப்பொழுது ஒரு ஆவி ஆக்ரோஷமாக கத்திக்கொண்டே என் கணவரை விட்டு வெளியேறியது. அந்த நாளிலிருந்து என் கணவர் குடிப்பது இல்லை. அற்புத விடுதலையை தந்த கர்த்தருக்கு ஸ்தோத்திரம். என் கணவருக்காக ஜெபித்த சகோதரர் அவர்களுக்கும் எங்கள் நன்றியை தெரிவிக்கிறோம்.**

**- திருமதி. ஜீவா தனசீலன், ஈரோடு.**

## வீடு கட்டுவதற்கான இடம் கிடைத்தது!



என் பெயர் மேரி சொர்ணலதா. ஐதராபாத்தில் நடைபெறும் அனைத்து கூட்டங்களுக்கும் தொடர்ந்து வருகிறேன். ஏனென்றால் **Dr.ஆனந்த ஸ்திரா** அவர்கள் கொடுக்கும் தேவ செய்தி மிகவும் ஆழமாகவும், சோர்ந்துபோன உள்ளங்களை ஆறுதல்படுத்துவதாகவும் ஆவிக்குரிய வாழ்வில் நன்கு வளர உதவியாகவும் இருக்கிறது.

வெகுநாளாக எனக்கு சொந்த வீடு கட்டவேண்டும் என்ற ஆசை இருந்தது. கடந்த முறை ஐதராபாத்தில் நடந்த கூட்டத்திற்கு வந்திருந்து சகோதரரிடம் நான் சொந்த வீடு கட்டவேண்டும் அதற்காக ஜெபியுங்கள் என சொன்னேன். சகோதரர் அவர்கள் தீர்க்கதரிசனமாக, **கர்த்தர் உங்களுக்கு ஒரு இடத்தை தருவார்** என கூறினார்கள். முதலாவது என்னால் அதை நம்ப முடியவில்லை. இருப்பினும் கர்த்தர் எனக்கு இரங்கினார். **சகோதரர் சொன்ன தீர்க்க தரிசனத்தின்படியே 27 இலட்சத்திற்கு ஒரு இடம் வாங்கும்படி கர்த்தர் உதவி செய்தார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.**

**- Sis. மேரி சொர்ணலதா, ஐதராபாத்.**


அன்பரின் ஆறுதல் டி.வி. நிகழ்ச்சி நேரங்கள்

தமிழில் அன்பரின் ஆறுதல் நிகழ்ச்சிகள்

நம்பிக்கை TELEVISION

வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு

இரவு 8.30 முதல் 9.00 வரை

தெலுங்கில் அன்பரின் ஆறுதல் நிகழ்ச்சிகள்

ARADANA TV

புதன், வியாழன், வெள்ளி,

இரவு 7.00 முதல் 7.30 வரை

மலையாளத்தில் அன்பரின் ஆறுதல் நிகழ்ச்சிகள்

HARVEST TV കേരളം

சனி

இரவு 7.30 முதல் 8.00 வரை

Trichy

# WE ARE HIRING



- **Accountant**
  **(B.com. / M.com. Graduates)**
  *Skills Required : Tally ERP 9*
- **Data Entry Operators**
  **(Any UG/PG Candidates)**
  *Skills Required : Good in computing skills*
- **Correspondence**
  **(Any UG/PG Candidates)**
  *Skills Required : Typing & computing skills (Tamil, English, Telugu)*
- **Social Media Executive**
  **(Any UG/PG Candidates)**
  *Skills Required : Good in social media platforms , Good in English & Tamil*
- **Video Editors**
  **(Any UG/PG Candidates)**
  *Skills Required : Able to work in Adobe Premiere Pro & After Effects*
- **Graphic Designers**
  **(Any UG/PG Candidates)**
  *Skills Required : Able to work in Adobe Photoshop & Illustrator*
- **Camera Man**
  **with adequate experience**
- **Drivers**
- **Cooks**
- **House Keepers**

- **Male / Female**
- **Christians Preferred**
- **Accommodation will be provided**
- **Apt Remuneration will be paid**

Apply to :

**info@mojindia.org**

# ஆகஸ்ட் மாதத்திற்குரிய தினசரி வாக்குத்தத்த வசனங்கள்
# காத்திரு

**ஆகஸ்ட் 1**
கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ பூமியைச் சுதந்தரித்துக் கொள்வார்கள். (சங். 37:9)

**ஆகஸ்ட் 2**
… இதோ, இவரே நம்முடைய தேவன்; இவருக்காகக் காத்திருந்தோம், இவர் நம்மை இரட்சிப்பார். (ஏசாயா 25:9)

**ஆகஸ்ட் 3**
அந்தப்படியே, அவன் பொறுமையாய்க் காத்திருந்து, வாக்குத்தத்தம் பண்ணப் பட்டதைப் பெற்றான். (எபி. 6:15)

**ஆகஸ்ட் 4**
நாங்களோ நீதி கிடைக்குமென்று ஆவியைக்கொண்டு விசுவாசத்தினால் நம்பிக்கையோடே காத்திருக்கிறோம். (கலா. 5:5)

**ஆகஸ்ட் 5**
நீ கர்த்தருக்குக் காத்திருந்து, அவருடைய வழியைக் கைக்கொள். (சங். 37:34)

**ஆகஸ்ட் 6**
நெடுங்காலமாய்க் காத்திருக்குதல் இருதயத்தை, இளைக்கப்பண்ணும்; விரும்பினது வரும்போதோ ஜீவ விருட்சம்போல் இருக்கும். (நீதி. 13:12)

**ஆகஸ்ட் 7**
கர்த்தருக்குக் காத்திரு; அவர் உன் இருதயத்தை ஸ்திரப்படுத்துவார்; திடமனதாயிருந்து, கர்த்தருக்கே காத்திரு. (சங். 27:14)

**ஆகஸ்ட் 8**
கர்த்தாவே, உம்முடைய இரட்சிப்புக்கு காத்திருக்கிறேன். (ஆதி. 49:18)

**ஆகஸ்ட் 9**
எப்பொழுது விடியும் என்று விடியற்காலத்துக்குக் காத்திருக்கிற ஜாமக்காரரைப் பார்க்கிலும் அதிகமாய் என் ஆத்துமா ஆண்டவருக்குக் காத்திருக்கிறது. (சங். 130:6)

**ஆகஸ்ட் 10**
உம்மை நோக்கிக் காத்திருக்கிற ஒருவரும் வெட்கப்பட்டுப் போகாதபடி செய்யும். (சங். 25:3)

**ஆகஸ்ட் 11**
நாம் காணாததை நம்பினோமாகில், அது வருகிறதற்குப் பொறுமையோடே காத்திருப்போம். (ரோமர் 8:25)

**ஆகஸ்ட் 12**
தீமைக்குச் சரிக்கட்டுவேன் என்று சொல்லாதே; கர்த்தருக்குக் காத்திரு. அவர் உன்னை இரட்சிப்பார். (நீதி. 20:22)

**ஆகஸ்ட் 13**
தமக்குப் பயந்து, தமது கிருபைக்குக் காத்திருக்கிறவர்களின் ஆத்துமாக்களை மரணத்திற்கு விலக்கி விடுவிக்கவும்… (சங். 33:18)

**ஆகஸ்ட் 14**
நானோவென்றால் கர்த்தரை நோக்கிக்கொண்டு, என் இரட்சிப்பின் தேவனுக்குக் காத்திருப்பேன்; என் தேவன் என்னைக் கேட்டருளுவார். (மீகா 7:7)

ஆகஸ்ட் 15
என் தேவனுடைய ஆலயத்தின் வாசற்படியில் காத்திருப்பதையே தெரிந்து கொள்ளுவேன். (சங். 84:10)

ஆகஸ்ட் 16
என் ஆத்துமாவே, தேவனையே நோக்கி அமர்ந்திரு; நான் நம்புகிறது அவராலே வரும். (சங்கீதம் 62:5)

ஆகஸ்ட் 17
உங்களுக்கு இரங்கும்படி கர்த்தர் காத்திருப்பார். (ஏசா. 30:18)

ஆகஸ்ட் 18
என் ஆத்துமாவே, நீ ஏன் கலங்குகிறாய்? ஏன் எனக்குள் தியங்குகிறாய்? தேவனை நோக்கிக் காத்திரு. அவர் சமூகத்து இரட்சிப்பினிமித்தம் நான் இன்னும் அவரைத் துதிப்பேன். (சங். 42:5)

ஆகஸ்ட் 19
தமக்குக் காத்திருக்கிறவர்களுக்கும் தம்மைத் தேடுகிற ஆத்துமாவுக்கும் கர்த்தர் நல்லவர். (புலம்பல் 3:25)

ஆகஸ்ட் 20
நான் கர்த்தர் எனக்குக் காத்திருக்கிறவர்கள் வெட்கப்படுவதில்லை. (ஏசா. 49:23)

ஆகஸ்ட் 21
என் மறைவிடமும் என் கேடகமும் நீரே ; உம்முடைய வசனத்துக்குக் காத்திருக்கிறேன். (சங். 119:114)

ஆகஸ்ட் 22
கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புதுப்பெலன் அடைந்து, கழுகுகளைப் போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள்; அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள், நடந்தாலும் சோர்ந்துபோகார்கள். (ஏசாயா 40:31)

ஆகஸ்ட் 23
கர்த்தருடைய இரட்சிப்புக்கு நம்பிக்கையோடு காத்திருக்கிறது நல்லது. (புலம். 3:26)

ஆகஸ்ட் 24
... கர்த்தர் வருமளவும் நீடிய பொறுமையாயிருங்கள். இதோ, பயிரிடுகிறவன் பூமியின் நற்பலனை அடையவேண்டுமென்று முன்மாரியும் பின்மாரியும் வருமளவும், நீடிய பொறுமையோடே காத்திருக்கிறான். (யாக். 5:7)

ஆகஸ்ட் 25
கர்த்தரை நோக்கி அமர்ந்து, அவருக்குக் காத்திரு. (சங். 37:7)

ஆகஸ்ட் 26
கர்த்தர் நீதி செய்கிற தேவன்; அவருக்குக் காத்திருக்கிற அனைவரும் பாக்கியவான்கள். (ஏசா. 30:18)

ஆகஸ்ட் 27
தேவனே, உமக்குக் காத்திருக்கிறவர்களுக்கு நீர் செய்பவைகளை, நீரேயல்லாமல் உலகத்தோற்றம் முதற்கொண்டு ஒருவரும் கேட்டதுமில்லை, செவியால் உணர்ந்தது மில்லை, அவைகளைக் கண்டதுமில்லை. (ஏசா. 64:4)

ஆகஸ்ட் 28
என் வாசற்படியில் நித்தம் விழித்திருந்து, என் கதவு நிலையருகே காத்திருந்து, எனக்குச் செவிகொடுக்கிற மனுஷன் பாக்கியவான். (நீதி. 8:34)

ஆகஸ்ட் 29
கர்த்தருக்காகப் பொறுமையுடன் காத்திருந்தேன்; அவர் என்னிடமாய்ச் சாய்ந்து, என் கூப்பிடுதலைக் கேட்டார். (சங். 40:1)

ஆகஸ்ட் 30
தேவன் தாமே கட்டி உண்டாக்கின அஸ்திபாரங்களுள்ள நகரத்துக்கு அவன் காத்திருந்தான். (எபி. 11:10)

ஆகஸ்ட் 31
தமக்குப் பயந்து, தமது கிருபைக்குக் காத்திருக்கிறவர்கள்மேல் கர்த்தர் பிரியமாயிருக்கிறார். (சங். 147:11)



# SJ SAVES TRUST
## மூலமாக மேற்கொள்ளப்பட்ட அறப்பணிகள்

ஜூலை மாதம் 2-ம் தேதியன்று **S.J. Saves Trust** டியூஷன் சென்டரில் படித்துக் கொண்டிருக்கிற 110 மாணவ, மாணவியர்களுக்கு **Dr. ஆனந்த ஸ்திரா** அவர்கள் படிப்பிற்கு தேவையான உபகரணங்களை வழங்கினார்கள்.

**School Bag, Tiffin Box,Water Bottle, Note, Pen, Pencil, Geometry Box** மற்றும் ஒரு சில அத்தியாவசிய பொருட்களான சோப்பு, எண்ணெய், பேஸ்ட், பிரஸ், பிள்ளைகளுக்கு தேவையான ஊட்டச்சத்து பானங்கள், ஊட்டச்சத்து மருந்துகளை வழங்கினார்கள்.

அத்துடன் மதிய உணவாக சிக்கன் பிரியாணி, முட்டை, காரம், இனிப்பு வகைகள் ஆகியவற்றையும் மகிழ்ச்சியோடு வழங்கினார்கள்.

## உதவி பெற்ற பிள்ளைகளின் குடும்ப சூழ்நிலை

மாணவியின் பெயர் தேவகி. 3 ஆம் வகுப்பு படிக்கிறாள். தாய், தகப்பன் இருவரையும் இழந்த இந்த மாணவியை உறவினர் தான் வளர்க்கிறார்கள். அவர்களும் வறுமை கோட்டுக்கு கீழ் உள்ளவர்கள்.

மாணவியின் பெயர் சின்ட்ரில்லா, வயது 13. இவளுடைய தங்கை பெயர் ஜெனித்தா வயது 8. இவர்களுடைய தகப்பன் விபத்தில் இறந்து விட்டார். கடந்த எட்டு ஆண்டுகளாகவே அந்த ஏழை தாய் மிகவும் வறுமையில் கஷ்டப்பட்டார். நமது ட்ரஸ்டு மூலம் கொடுத்த உதவிகள் மிகவும் பிரயோஜனமாய் இருக்கிறது என்று கண்ணீர் மல்க நன்றி கூறினார்கள்.

மாணவன் பெயர் சகித்ரோஜன், வயது 8. இவனுடைய தம்பி பெயர் பூமேஸ், வயது 6. இவர்களுடைய தகப்பன் கடன் பாரத்தினால் தற்கொலை செய்து மரித்து விட்டார். தாயார் மிகவும் இளம் வயதில் விதவை ஆகிவிட்டார். தனது மாமியார் மற்றும் இரண்டு பிள்ளைகளோடு (மாமியாரும் விதவை) வறுமையில் வாழ்ந்துக்கொண்டிருக்கின்றார்.நமது ட்ரஸ்டு மூலம் பெற்று வருகிற உதவிகள் பிள்ளைகளுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது என்று கூறினார்.

இப்படியாக 110 பிள்ளைகளும் ஒவ்வொருவிதமான கஷ்டங்களில் இருப்பவர்கள். **Dr. ஆனந்த ஸ்திரா** அவர்கள் நடத்துகிற டியூஷன் சென்டர் மூலம் இந்த பிள்ளைகள் படிப்பின் அவசியத்தை உணர்ந்துக்கொண்டு நன்றாக படித்து வருகிறார்கள். ஐயா அவர்கள் சிறுவயதில் படிப்பதற்கு வார்டன்கள் தடையாக இருந்தனர். ஆனால் இயேசு அவர்களுக்கு

காட்சியளித்து அவர்களை படிக்க வைத்தார். அந்த கிருபையை நினைத்து ஏழை பிள்ளைகள் நன்றாக படிக்க ஐயா அவர்கள் உதவி செய்துக்கொண்டு வருகிறார்கள்.

## பிள்ளைகளின் தேவைகள்

நல்ல உணவு, நல்ல உடை, மாலையில் படிப்பதற்கு ஏற்ற நல்ல சூழல் இவையே இந்த பிள்ளைகளின் தேவையாக இருக்கிறது. இந்த தேவைகளை **S.J.Saves Trust** மூலம் பிள்ளைகள் பெற்று வருகின்றனர்.

**இந்த அறப்பணியில் எங்களோடு இணைந்து கைகோர்த்து உதவி செய்கிற அன்பு பங்காளர்கள் அனைவருக்கும் நன்றி.**
**S.J.Saves Trust ட்யூஷன் சென்டர் வாயிலாக பிள்ளைகளுக்கு மாலை வகுப்புகளை நடத்தி, இரவு உணவு கொடுத்து போஷித்து வருகிறோம்.**
**ஒரு பிள்ளைக்கு மாதம் Rs.1000/- செலவாகிறது**

**ஏழை எளியவர்களுக்கு உதவிட கீழ்க்காணும் வங்கியின் மூலமாக அனுப்பவும்.**

| | | |
|---|---|---|
| Bank A/c Name | : | SJ Saves Trust |
| Account No. | : | 019150310875369 |
| Bank Name | : | Tamil Nadu Mercantile Bank |
| Branch | : | Palakarai, Trichy. |
| IFS Code | : | TMBL0000019 |
| A/c Type | : | Current |

**மருத்துவமனை பணிகளுக்கு கீழ்க்காணும் வங்கியின் மூலமாக அனுப்பவும்.**

| | | |
|---|---|---|
| Bank A/c Name | : | SJ Saves Trust |
| Account No. | : | 36477148891 |
| Bank Name | : | State Bank of India |
| Branch | : | Cantonment, Trichy Main Branch |
| IFS Code | : | SBIN 0000930 |
| A/c Type | : | Current |

**IT Act-ன்படி Sec. 80G Exemption உண்டு**




**சேலூர் செல்லப்பம்பாளையம், சாணார் பாளையம், மல்லிகாபுரம், ஓலப்பாளையம் ஆகிய ஊர்களில் உள்ள மாணவ மாணவிகளுக்கு அத்தியாவசிய பொருள்கள், படிப்பிற்கு தேவையான உபகரணங்கள் மற்றும் மருந்து வகைகள் வழங்கப்பட்டது.**




















# S.J.S.T கிராமப்புற மருத்துவமனை பணிகள்

நமது மருத்துவமனையிலேயே தங்கி நோயாளிகளை நன்கு கவனிக்கக்கூடிய ஒரு மருத்துவர் தேவைப்படுகிறார். அதற்காக ஜெபியுங்கள். மருத்துவமனையில் தற்பொழுது பணி செய்கிற மருத்துவர்களையும் கர்த்தர் ஆசீர்வதிக்கும்படியாக ஜெபியுங்கள்.

**மருத்துவமனைக்கு வேண்டிய தியேட்டர் விரைவில் கட்டவேண்டும். அதற்குரிய தேவைகள் சந்திக்கப்பட ஜெபியுங்கள்.** பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலையில் உள்ள நோயாளிகள் பலர் வந்து சிகிச்சை பெற்று செல்கின்றனர். அதனால் விசுவாசத்தோடு எந்த லாபமும் கருதாமல் சுற்றியுள்ள கிராமங்களின் நன்மைக்காக இந்த மருத்துவமனையை நாம் நடத்திவருகிறோம். ஆகவே நம்முடைய மருத்துவமனைக்காக தொடர்ந்து ஊக்கமாய் ஜெபியுங்கள். கர்த்தர் தாமே உங்களோடு இருப்பாராக!




## அன்பரின் ஊழிய சமூக வலைத்தள விபரங்கள்

**facebook**

Ministry of Jesus
My Deliverance Church
Ananda Stira
Margret Stira
Rev.Dr.A Joshua
Jane Joshua
Jonathanmosesstira

**Youtube**

Ministry of Jesus
My Deliverance Church
Dr Jane Joshua

**Twitter**

Ministry of Jesus
drjane15
My Deliverance Church
Jonathanstira

**Instagram**

ministryofjesus.in
dr.janejosh
mydeliverancechurch
Jonathanmosesstira

info@mojindia.org

www.ministryofjesus.in
www.mydeliverance.church
www.sjsavestrust.in

# உலகச் செய்திகள்

- ஐ.நா.அறிக்கையின்படி 15 வயது முதல் 24 வயதுக்குட்பட்ட இளைஞர்கள், உலக மக்கள் தொகையில் ஆறில் ஒரு பங்கு உள்ளனர். இதில் பெரும்பாலானோர் வளரும் நாடுகளில் உள்ளனர். கல்வி, வேலைவாய்ப்பு, அரசியலில் பங்கு போன்றவற்றை இளைஞர்களுக்கு ஒவ்வொரு அரசும் சரியான வீதத்தில் ஏற்படுத்தி தர வேண்டும்.
- குடும்பத்தை முன்னேற்ற வேண்டிய பொறுப்பும் இளைஞர்கள் கையில் உள்ளது. எனவே இளைஞர்கள் அனைவரும் தன் பொறுப்புகளை உணர்ந்து செயல்பட வேண்டும். ஒரு சிலர் இளமைப்பருவத்தில் ஆல்கஹால், புகையிலை, போதைப்பொருள் ஆகியவற்றுக்கு அடிமையாகின்றனர். இந்த நிலை மாறி இளைஞர்கள் தங்கள் திறமைகளை வளர்த்துக்கொண்டு நாட்டின் முன்னேற்றத்துக்கு உதவ இந்நாளில் உறுதி ஏற்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டு வருகிறது.

- இன்று நம் வீட்டில் யாருக்காவது தலைவலி, வயிற்றுவலி, இருமல், சளி என்றால் உடனடியாக தெரு முனையில் இருக்கும் மெடிக்கல் ஷாப் நோக்கி ஓடுகிறோம்! ஆனால் நம் முன்னோர்கள். வீட்டிற்குள்ளே மெடிக்கல் ஷாப்பினை வைத்திருந்தார்கள். அதன் பெயர் அஞ்சறைப் பெட்டி.
- வீட்டில் யாருக்காவது தலைவலி, வயிற்றுவலி, காய்ச்சல், சளி என்றால், உடனே சமையலறையில் இருக்கும் அஞ்சறைப் பெட்டியிலிருந்து மருந்தை கொடுப்பார்கள். எந்த வித பக்க விளைவுகள் இன்றி நோயும் இரண்டே நாளில் குணமாகிவிடும்!
- அஞ்சறைப் பெட்டியில் வைக்கப்பட்டு இருக்கும் சுக்கு, திப்பிலி, கண்டந்திப்பிலி, சீரகம், கருஞ்சீரகம், மஞ்சள், வசம்பு போன்ற பொருட்களில் நிறைய மருத்துவகுணங்கள் உள்ளன. அதைப் பற்றி தெரிந்து கொள்ளலாம்.

**சுக்கு :** ஜீரணகோளாறுகளைபோக்கும். தலைவலிக்கும் சுக்கை அரைத்து பற்றுப் போடலாம்.

**திப்பிலி :** வயிற்றில் உருவாகும் வாயு, உப்பு சத்தைக் குறைக்கும், தலைவலியை போக்கும்.

**கண்டந்திப்பிலி:** இதில் ரசம் வைத்து குடித்தால், உடல் வலியை போக்கும். வரட்டு இருமலுக்கு நல்லது.

**சீரகம்:** இருமலை கட்டுப்படுத்தும் பித்தத்தைக் குறைக்கும்

**கருஞ்சீரகம் :** காய்ச்சல், தலைவலிக்கான மருந்து

**மஞ்சள் :** கிருமிநாசினி. கல்லீரலை பலப்படுத்தும், தோல் சம்பந்தமான நோய்களுக்கு சிறந்த மருந்து, புற்றுநோயைக் கட்டுப்படுத்தும். வீக்கம் இருந்தால் மஞ்சளுடன், வெங்காயத்தை அரைத்து போட்டால் வீக்கம் குறையும்.

**வசம்பு :** வயிற்றில் உள்ள கிருமிகளை அழிக்கக்கூடிய ஆற்றல் உள்ளது. அதனால் குழந்தைகளுக்கு இதை பெரியவர்கள் பயன்படுத்துவார்கள்.

செகந்திராபாத்தில் **அற்புத குடும்ப ஆசீர்வாதக் கூட்டம்**

Place : YMCA Main Hall, S.P. Road,
Yasoda Hospital (Opp) Near Clock Tower, Secunderabad.

நேரம்: மாலை 4.30 மணி முதல் இரவு 9.00 மணி வரை



**ஆகஸ்ட் 5 சனிக்கிழமை**

தேவ செய்தியாளர்கள்

**Dr. ஆனந்த ஸ்திரா**

**ஜோனத்தன் மோசஸ் ராஜ் ஸ்திரா**

தொடர்புக்கு : 91770 87860, 99445 36343

**32-ம் ஆண்டு ஆலய மங்கலப் படைப்பு விழா மற்றும்**
**அசனப் பண்டிகை 2023**

# சிறப்பு நற்செய்திக் கூட்டம்

ஆகஸ்ட்
**12, 13**
சனி, ஞாயிறு

நேரம்:
மாலை 6.30 மணி

இடம் : இம்மானுவேல் ஆலய வளாகம்,
உடுமலைப்பேட்டை.

தேவ செய்தி : **Dr. ஆனந்த ஸ்திரா**

தலைமை : அருள்திரு. **S. சுதர்சன்**
திருமண்டல குருத்துவ செயலர் & சேகரத் தலைவர்

குறிப்பு : ஆகஸ்ட் 12-ம் தேதி சனிக்கிழமை காலை 10.30 மணி முதல்
2.30 மணி வரை இம்மானுவேல் ஆலயத்தில் நடைபெறும் உபவாச ஜெபத்திலும்
சகோதரர் தேவசெய்தி வழங்குவார்கள்.

தொடர்புக்கு : 94888 45627, 82203 17472

# Rev.Dr.A. ஜாஷ்வா அவர்கள் ஜெபத்தினால் மகத்துவ தேவன் செய்த அற்புதங்கள்! தேவ நாமம் மகிமைக்காக!



## குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை



என் பெயர் ஜான்சிராணி. என் மகன்கள் குடிப்பழக்கத்திற்கு அடிமையாகி யிருந்தது எனக்கு அதிக மனவேதனையைத் தந்தது. இரண்டு வருடங்களுக்கு முன்பாக திருநெல்வேலி அன்பரின் ஊழிய கிளை அலுவலகத்தில் நடைபெற்ற தனி ஜெபத்திற்கு நான் வந்திருந்தேன். **Rev.Dr.A. ஜாஷ்வா அவர்களிடம் என் மகன்களுக்காக ஜெபிக்கும்படி சொன்னேன். பாஸ்டர் என் மகன்களுக்காக பாரத்துடன் ஜெபித்து விட்டு கர்த்தர் உங்கள் மகன்களை மாற்றுவார் என சொல்லி அனுப்பினார்கள். பாஸ்டர் சொன்னபடியே என்னுடைய இரண்டு மகன்களும் குடிபழக்கத்திலிருந்து விடுதலையாகி நல்ல பிள்ளைகளாக இருக்கிறார்கள். கர்த்தர் தான் அவர்களை மாற்றினார். மேலும் மகன்களுக்கு திருமணமாகி குழந்தை பாக்கியத்தைக் கொடுத்தார். கடன்களை எல்லாம் அடைக்கும்படி உதவி செய்தார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!**

**- திருமதி. ஜான்சி ராணி, திருநெல்வேலி.**

## கை வலி நீங்கியது!



என் பெயர் ஜோயல். நான் மிகுந்த கை வலியுடன் கூட்டத்திற்கு வந்தேன். ஜெபநேரத்தில் **Rev. Dr. A. ஜாஷ்வா அவர்கள் சரீரத்தில் பெலவீனம் உள்ளவர்கள் உங்கள் வலது கரத்தை வலி, வேதனை உள்ள இடத்தில் வைத்து ஜெபியுங்கள் என சொன்னார்கள். நானும் அவ்வாறே ஜெபித்தேன். கர்த்தர் தாமே எனக்கு இருந்த நீண்ட நாள் கைவலியை உடனே நீக்கினார். இப்பொழுது நல்ல சுகத்துடன் இருக்கிறேன். தேவனுக்கே மகிமை!** **- திரு. ஜோயல், ஈரோடு.**

## ஒரு மாதமாக இருந்த தலைவலி நீங்கியது!



எனக்கு கடந்த ஒரு மாதமாக தலைவலி, தலைசுற்று பிரச்சனை இருந்தது. இதனால் எந்த வேலையும் என்னால் செய்ய முடியவில்லை. இந்த கூட்டத்திற்கு வரும்பொழுது மிகுந்த வேதனையுடன் தான் வந்தேன். ஜெப நேரத்தில் **Rev. Dr. A. ஜாஷ்வா அவர்கள் நோயினால் கஷ்டப் படுகிறவர்களுக்காக விஷேசித்த ஜெபத்தை ஏறெடுத்தார்கள். நானும் என் தலையில் கை வைத்து விசுவாசத்துடன் ஜெபித்தேன். ஜெபத்திற்கு பின் எனக்கு தலைவலி இல்லை. ஒரு மாதமாக இருந்த தலைவலி முற்றிலும் நீங்கி விட்டது. உடனடியாக எனக்கு சுகம் கொடுத்த தேவனுக்கு கோடி ஸ்தோத்திரங்கள்.**

**- சகோதரி. தெனாலி, விஜயவாடா.**

Regd.with RNI No.:TNTAM/2014/60345, Postal Regd.No.:TRY/092/2022-2024 (with prepayment)
Posted at Trichy RMS on 27th, 28th, 29th of every month; Date of publication 25th or 26th of every month

நாகர்கோவிலில்

அற்புத குடும்ப ஆசீர்வாதக்கூட்டம்

ஆகஸ்ட் 15 செவ்வாய்கிழமை (அரசு விடுமுறை)

இடம் : விஜயதா திருமண மண்டபம்
WCC ரோடு, நாகர்கோவில்

நேரம் : காலை 9.30 மணி முதல்
மதியம் 2.00 மணி வரை

தேவ செய்தி
Dr. ஆனந்த ஸ்திரா
Mrs. மார்கிரேட் ஸ்திரா

தொடர்புக்கு : 94888 45627 & 0431 - 2741925



சென்னையில்

உங்கள் விடுதலையின் நாள்



இடம் : J.J.மஹால்,
L.K.S. தங்கமாளிகை எதிரில்,
G.S.T. மெயின் ரோடு, கடப்பேரி,
மேற்கு தாம்பரம், சென்னை.

ஆகஸ்ட் 15 செவ்வாய்கிழமை (அரசு விடுமுறை)

தேவ செய்தி
Rev.Dr.A. ஜாஷ்வா

நேரம் : காலை 9.30 மணி முதல்
மதியம் 1.00 மணி வரை

தொடர்புக்கு : 94888 45627 & 80987 42638

திருச்சியில்

அற்புத சுகமளிக்கும் குடும்ப ஆசீர்வாதக்கூட்டம்

ஆகஸ்ட் 26 சனிக்கிழமை

இடம் : அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலம்,
10வது குறுக்குத்தெரு மேற்கு விஸ்தரிப்பு,
தில்லைநகர், திருச்சி - 18

நேரம் :
காலை 9.30 மணி
முதல்
மதியம் 2.00 மணி
வரை

தேவ செய்தி
Dr. ஆனந்த ஸ்திரா மற்றும் குடும்பத்தினர்

தொடர்புக்கு
94888 45627, 0431- 2741925

குடும்பமாய் வாருங்கள்!
ஆசீர்வாதமாய் வாழுங்கள்!

Published by Dr.Jane Joshua on behalf of ANBARIN OOZHIYAM published from
No.40, Seventhi Pillaiyar Koil Street, Woraiyur, Trichy - 620 003 and printed by Mr. D. Asu Selvaraj
at Angel Printers, 1/459-c, N.G.O. Colony, Satchiyapuram, Sivakasi West - 626 124, South India.
Editor : Dr.Jane Joshua, M.B.A., Ph.D.,